# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62:10**


**Translated from**
**BS#855**
**Nov-Dec 2009**


**பொருளடக்கம்**


✡ கர்த்தரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது................................ 2
✡ மேசியா – ஓர் மனப்பூர்வமான பலி.......... 9
✡ பாவங்களும் அவைகளுக்கான தண்டனைகளும்............................. 12
✡ கேள்வி–பதில்................................ 17
✡ தரிசனங்கள் மற்றும் சொப்பனங்கள்....... 18



**BS Tamil Version - 90**
**2024**

# “கர்த்தரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது”

**சங்கீதம் 136:1.**

“O Give Thanks to the LORD for his Mercy endures forever” Pslam 136:1.

நமது நாட்டின் தலைவர்களின் அறிக்கைகளின்படி அமெரிக்காவின் ஜனாதிபதி மற்றும் மாகாணங்களின் ஆளுநர்கள், பெரும்பான்மையான ஜனங்கள் அனைவரும் தற்காலிக உலக சம்பந்தமான வாழ்வு வளங்களின் ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு நாளை ஏறக்குறைய நேர்மையுடன் கொண்டாடியுள்ளனர். இந்த பொதுவான வழக்கத்துடன் தொடர்புடைய ஒரு விலைமதிப்பற்ற மன உணர்வை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் யாத்ரீகரான தகப்பன்மார்கள் தொடங்கி வைத்தனர். இந்த ஏற்பாட்டின் செல்வாக்கு நிச்சயமாக அனேக விஷயங்களில் நன்மை தருவதாயிருக்கிறது. நன்மையும் பரிபூரணமுமான ஒவ்வொரு ஈவையும் வழங்குபவரான தேவனிடத்தில் ஜனங்களின் மனதை இழுத்துக் கொள்கிறது. இந்த வருடாந்தர அனுசரிப்பு ஒரு மரபுவழி சடங்கு மட்டுமே என்பது வேதனையுடன் தெளிவாயிருக்கிறது, ஏனென்றால் இந்த விஷயத்தை நாம் விரும்பியபடி விளக்கினால், ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே மகாபெரிய சிருஷ்டிகரையும் அவருடைய அற்புதமான திட்டத்தையும், மனுபுத்திரருடனான அவருடைய நடவடிக்கைகளை வகைப்படுத்துகிற பிரமாணங்களையும் போதுமான அளவு நன்கு அறிந்திருக்கிறபடியால், நன்றி செலுத்துவதற்கான அவர்களுடைய காரணங்களை தர்க்கரீதியாக நியாயப்படுத்தவும், புரிந்து கொள்ளவும் முடியும். கர்த்தருடைய பரிபாலனங்களை போற்றுவதற்கு தடையாக இருக்கும் சில காரியங்களையும் தேவனுக்கு உண்மையாக நன்றி செலுத்துவதை அவைகள் தடுத்து கட்டுப்படுத்துவதையும் ஒவ்வொன்றாகப் பார்ப்போம். கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் கீழ் சிலருடைய மனதில் விசுவாசத்திற்கும், நன்றியறிதலுக்கும் தடையாக இருக்கும் இவைகளை அகற்றிப் போடுவதில் நாம் வெற்றி காண்போமானால், அப்படிப்பட்டவர்கள் மீது ஒரு ஆசீர்வாதம் பின்தொடரும் என்று நாம் உறுதியாக உணர்ந்து கொள்ளுகிறோம். ஏனெனில் சிருஷ்டிகரிடத்தில், நன்றி உணர்வும், நன்றி தெரிவித்தலும் மதித்துப் போற்றுவதைக் குறிப்பதுடன் நல்லவற்றை போற்றுவது, நீதியுள்ள குணாம்சத்தையும் தெய்வீக தரநிலைகளுக்கு முழுமையான கீழ்ப்படிதலையும் நிச்சயமாகக் கட்டியெழுப்ப முனைகிறது.

உலகில் ஒவ்வொரு நாளும் சுமார் 1,50,000 மரணங்கள் நிகழ்கின்றன. இவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்; அவர்களில் பலர் அவை ஏன் அனுமதிக்கப்பட்டன என்பது பற்றி அறியாதிருப்பதுடன், ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கியுள்ளனர். இந்த நாளின் அனுகூலங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் கீழ் வாழ்ந்து கொண்டு இருக்கும் மற்றவர்கள், நன்றியறிதலை உணராமலும் உணர முடியாமலும் இருக்கிறார்கள். சரீரரீதியாகவும் மனரீதியாகவும் நோய்வாய்ப்பட்ட அத்தகைய நிலையில் இருக்கிறார்கள். பலர் மிகுதியான வறுமையில் இருக்கிறார்கள் என்றாலும் அது அவர்களின் தவறு இல்லை. எனவே நன்றி செலுத்தும் நாளின் ஆவியை இவர்கள் ஓரளவு மட்டுமே மதித்து பாராட்டுவதில் ஏதேனும் ஆச்சரியமுண்டா?

அங்கே மற்றொரு வகுப்பார் நன்றியறிதல் இல்லாத ஜனங்கள் இருக்கின்றனர்; இவர்கள் ஜீவியத்தின் சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் மிகுதியான அளவில் அனுபவித்த போதும் தேவனுக்கு நன்றி செலுத்தாதவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் நித்தியவேதனையில் சுட்டெரிக்கப்பட ஒப்படைக்கப்படவில்லை என்று அவர்களுக்கு கற்பிக்கப்பட்டபோது அதில் தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கு ஒரு காரணம் இருக்கிறது என்று அவர்கள் கடந்த கால மூடநம்பிக்கையில் இருந்து விழித்துக் கொண்டனர். அத்தகைய போதனையின் நியாயமற்ற தன்மையையும் அபத்தத்தையும் ஏற்றுக் கொண்ட இவர்கள், எல்லா விஷயங்களையும் குறித்து சந்தேகப்படுகிறவர்களாக மாறிவிட்டனர். அவர்கள் பெற்றுக் கொண்ட வாழ்வு வளம் எதுவாயினும், அதற்காக தங்களுடைய சொந்த ஆற்றலுக்கும், நண்பர்களின் இரக்கத்துக்கும் அல்லது அதிர்ஷ்டத்திற்கும் நன்றி செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் சர்வ வல்லவருக்கு எந்த நன்றியும் செலுத்துவதில்லை. அவர்கள் அவரை அறியவில்லை. அவர்களின் அறிவின் கண்கள் தெய்வீக குணாம்சம் மற்றும் திட்டத்தின் உண்மைகளுக்கு இன்னும் மூடப்பட்டுள்ளன.

## நன்றியறியாதவர்களுக்கான உதவி

அனைவருக்கும் நன்றியறிதலை சாத்தியமாக்கும் அதிக உண்மையான மற்றும் அகத்தூண்டுதலான மனநிலையை அடைய உதவிக்காக தெய்வீக வார்த்தை–

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

யான வேதாகமத்தின் நிலைப்பாட்டிலிருந்து உண்மை நிலைமையை சுருக்கமாக ஆராய்வோமாக, அதன் போதனைகள் பற்றிய நமது மதிப்பீடுகளைப் பற்றி தப்பெண்ணம் கொள்ளச் செய்யும் எல்லாவற்றிலிருந்தும் உதாரணமாக, இருண்ட யுகத்திலிருந்து வழங்கபட்ட பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் கொள்கைகள் முதலியவற்றிலிருந்து நம் மனதை விலக்குவோமாக. தேவனுடைய வார்த்தையை ஆராய்வதற்காக இவற்றை தற்காலிகமாக ஒதுக்கி வைப்போமாக. ஒருமுறை அதன் போதனைகள் தெளிவாகக் காணப்பட்டால், பல்வேறு சமய கொள்கைகளின் பல்வேறு அறிக்கைகளுடன் அவற்றை ஒப்பிட்டு பார்க்க நாம் சிறப்பாக தயாராக இருப்போம். இதன் விளைவாக நமது நன்மைக்காகவும் தெய்வீக குணாம்சம் மற்றும் திட்டத்தை பற்றிய நமது போற்றுதலை அதிகரிக்கவும், அதற்கேற்ப நமது நன்றியை அதிகரிக்கவும் முடியும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

ஆயினும், இந்த விஷயங்களைப் பற்றிய முழுமை யான தெளிவான கருத்துக்களை வேதவாக்கியங்கள் விளக்குவது, பிரதிஷ்டை செய்யப்பட்ட விசுவாசிகளால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் தெய்வீக காரியங்களை மதித்துணர்ந்து போற்றுவதற்கு பரிசுத்த ஆவியினால் உதவி செய்யப்படும். மற்றவர்களால் பார்க்க முடியாவிட்டாலும், தேவனுடைய ஆழமான காரியங்களை முழுமையாகவும் தெளிவாகவும் மதிப்பிடும் அர்த்தத்தில் அவர்கள் பொதுவான வகையில் வெளிப்புற தோற்றத்தையாவது பார்க்க முடியும். இந்த விஷயத்தைப் பற்றிய நமது கருத்துக்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல இன்னும் இந்த நிலைக்கு வராத சிலருக்கும் பொருந்தும் என்று நம்புகிறோம். ஆனால் அவர்கள் கடந்த காலத்தை விட இன்னும் தெளிவாகப் பார்க்கவும், பின்னர் பரிசுத்தமாக்கப்படுவதற்கும் இறுதியில் ஆவியின் வழிகாட்டுதலின் கீழ் அந்த நிலைப்பாட்டிலிருந்து இன்னும் முழுமையான போற்றுதலுக்கும் நடத்தப்பட முடியும் என்றும் நம்புகிறோம்..

இந்த உலகத்தின் மனுக்குலம் முழுவதும் தேவனுடைய பிள்ளைகள் என்றும் அவரும் அவர்களை அப்படியே அங்கீகரித்து அந்த கண்ணோட்டத்தில் நடத்துகிறார் என்று யூகம் செய்வது சந்தேகத்திற்கு வழிவகுக்கிறது. இந்த ஆண்டிலும் கூட நெருப்பு, வெள்ளம் மற்றும் பெருங்காற்று ஏற்படுத்திய பேரழிவுகளைப் பற்றி யார் சிந்திக்க முடியும்? தேவன் மனுக்குலத்தை தமது பிள்ளைகளாகக் கருதினால், அவர் நடத்துகிறபடி எந்த ஒரு அன்பான பூமிக்குரிய பெற்றோரும் தன்னுடைய சந்ததியினரை நடத்தமுடியாது என்பது நிச்சயம் என்பதை யார் உணர முடியாது. இதே நியாயப்படுத்துதல் நோய், துக்கம்,வலி மற்றும் மரணம் ஆகியவற்றிற்கும் உண்மையாகவே இருக்கும். தேவனுடைய தந்தைத்துவம் மற்றும் மனிதனின் சகோதரத்துவம் சம்பந்தமாக சிலர் உண்மையென்று வைத்திருக்கும் வேத பூர்வமற்ற கூற்று தன்னைத்தானே நிராகரிக்கிறது. ஏனென்றால் நம் இனத்தை சந்ததியை பொறுத்தவரை தேவனுடைய தந்தைத்துவத்தின் எந்த ஆதாரத்தையும் நாம் காணவில்லை, அல்லது அவர் உலக நலனுக்காக பெற்றோரின் அக்கறையை உபயோகிக்கவுமில்லை. அது மட்டுமன்றி ஆறாயிரம் வருடங்களுக்கும் மேலாக இத்தகைய அனுபவங்கள் மனுக்குலத்தின் பங்காயிருக்கின்றன. அப்போஸ்தலர் இந்த விஷயத்தை பற்றி பேசுகையில் கிறிஸ்தவர்களுக்கு அறிவிப்பது, "**நீங்கள் ஒருகாலத்தில் மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தீர்கள்**" (எபே. 2:3), உலகமோ இன்னும் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருக்கிறது. கிறிஸ்தவர்களோ "**உலகத்தின் மீதுள்ள ஆக்கினையிலிருந்து தப்பித்து விட்டனர்**" என்று மீண்டும் அவர்களுக்கு அறிவிக்கிறார். அது ஆக்கினை தீர்ப்பு இன்னும்உலகம் முழுவதின் மீதும் தங்கியிருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறது. (1 கொரி. 11:32).

இந்த உலகின் மீதான ஆக்கினைத் தீர்ப்பு என்ன? ஏன் மனுக்குலம் இந்த சாபம் அல்லது ஆக்கினையின் கீழ் "**கோபாக்கினையின் பிள்ளைகள்**" என்று அழைக்கப்படுகின்றனர்? இதற்கு பதில் தேவனுடைய கிரியை அனைத்தும் பூரணமானது. ஏதேனில் அவர் மனிதனை சிருஷ்டித்த போது தமது சொந்த சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டித்தார். மேலும், மனிதன் பூரணமானவனாக தேவனோடு முழு இசைவுள்ளவனாக இருந்தான். ஆதாம் அந்த சமயத்தில் தேவனுடைய ஒரு மகனாக அங்கீகரிக்கப்பட்டிருந்தார். வசனத்தில் காணப்படும் விளக்கத்தின்படி அவர்இந்த உறவிலிருந்தும் தேவனுடனான ஐக்கியத்திலிருந்தும் விழுந்து போனார். அவர் கீழ்ப்படியாமையின் சத்தத்துக்கு செவிகொடுத்து கவனித்ததால், ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் வந்தார். அந்த சாபம் அவரை அன்னியனாகச் செய்து இந்த ஐக்கியத்தையும் அவரிடமிருந்து பறித்துவிட்டது. அதன் முடிவானது வார்த்தைகளில் "**செத்துக் கொண்டே சாவாய்**" என்று முழு வலிமையுடன் வெளிப்படுத்தப்பட்டது; (எபிரேயத்திலும் அவ்வண்ணமே உள்ளது, ஆதி. 2:17). "**அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்: வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய் நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்கு திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்: நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.**" (ஆதி. 3:18,19). அப்போஸ்தலர் பவுல் இந்த காரியத்தை தொகுத்து சுருக்கமாக சில வார்த்தைகளில் கூறுகிறார்: "**இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும் எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.**" (ரோம. 5:12).

## குற்றவாளிகளின் இனம்

இந்த நிலைபாட்டிலிருந்து ஆதாமும் அவனுடைய இனமும் தண்டனையடைந்த இனமாக மரண தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். வாழ்வதற்கு அனுகூலமற்ற நிலைமைகளை தேவன் அனுமதித்ததற்கு இது காரணமாயிருக்கிறது; வறட்சி, வெள்ளம், பெருங்காற்று சூறாவளி, தொற்று நோய், கொள்ளைநோய் முதலியவைகள் மேலும் அனைத்து பேரழிவுகளும் நேரடியாக கர்த்தருடைய செயலால் வந்தது என்று புரிந்து கொள்ளக் கூடாது, ஆனால் மாறாக பாவத்தினாலும், இந்த தண்டனை காலத்தில் பாடங்கள் கற்று கொள்வது தேவைப்படுவதாலும்இப்பொழுதுள்ள நிலையற்ற திருப்தியற்ற இயற்கையின் நிலைமைகள் மனிதனின் அனுபவத்திற்கு கர்த்தரால் அனுமதிக்கப்பட்டது; இந்த நிலைப்பாட்டில் இருந்து வாழ்வதற்கான அனைத்து மனித உரிமைகளும் நீண்ட காலமாக இழக்கப்பட்டுவிட்டன என்பதை நம் கருத்தில் கொண்டு, நாம் வாழும் அபூரண நிலைமைகளின் ஆசீர்வாதங்களையும் அனுகூலங்களையும் பற்றிய புதிய எண்ணத்தைப் பெறுகிறோம்.

ஒரு இனமாக நாம் தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள் அல்லது மேலும் குமாரர்களாக நடத்தப்படவும் மாட்டோம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த இனமும் தேவனுக்கு எதிராக கலகம் செய்து கொண்டிருக்கிற படியால் அவருடைய ஆசீர்வாதத்திற்கும் அல்லது அவருடைய ஐசுவரியத்திலிருந்து எந்த தயவுக்கும் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள் என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தற்காலிக ஆசீர்வாதத்திற்கும் அல்லது அவருடைய தயவிலிருந்து எந்த உதவிக்கும் தகுதியற்றவர்கள். ஒவ்வொரு தற்காலிக ஆசீர்வாதமும் நமது சலுகைகளையும் தண்டனையளிக்கப்பட்ட நமது ஜீவனையும் நீட்டிக்கிற ஒரு கிருபையாக மதிக்கப்பட வேண்டும், இந்த நிலைப்பாட்டிலிருந்து, கர்த்தர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் தமது மழையைப் பெய்யப்பண்ணுகிறார் என்று நாம் வாசிக்கிறோம் (மத். 5:45). மனுக்குலத்தில் மிகப்பெரும்பாலானோர் இன்னும் புறம்பாக்கப்பட்டவர்களாக, குமாரர்களாக அல்ல, ஆனால் பாவிகளும், கலகக்காரர்களும் "**தேவனுடைய பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமலும்**" ஐக்கியத்தைக்கூட விரும்பாமலும் அவரை பிரியப்படுத்த விரும்பாமலும் இருக்கிறார்கள்.

உலகின் மனுக்குலத்திற்கான தேவனுடைய ஏற்பாடுகளை மிகச் சுருக்கமாகப் பார்க்கலாம். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களின் நன்மைக்காக, தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து உலகத்தாருடன் அனுதாபம் காட்டுவது உலகத்தாருடனான தெய்வீக நடவடிக்கைகளைப் பற்றி உணர்வது எப்படி என்பதை அவர்கள் அறிவதற்காகவும், இன்னும் இந்த உலகத்தின் தேவனால் கண்கள் குருடாக்கப் பட்டிருப்பதால், நமது தேவன் வழங்கிய ஒரு இரட்சகரின் தேவையை உணர்ந்து பாராட்டுதல் மற்றும் புரிந்து கொள்ளும் கண்களால் இதுவரை காணாமலும் பூமிக்குரிய அன்பான உறவினர்களைப் பற்றிய நம்பிக்கை இல்லாத மற்றவர்களை போல, அவர்கள் துக்கபடாமல் இருக்கவும் இது அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையாகவே, அவர்களின் பெரும்பாலானோர் குருடர்களாகவே இருக்கின்றனர், அவர்கள் இரட்சகரின் தேவையையும் மேலும் அவருக்குள் மிகப்பெரிய இரட்சிப்பு இருக்கிறது என்பது சம்பந்தமான தேவனுடைய வார்த்தையின் சாட்சியையும், உணர்ந்து பாராட்ட முடியாமல் இருக்கின்றனர்.

## இருண்ட யுகங்களின் தப்பறை

இருண்ட யுகங்களின் போது சத்துருவின் குருடாக்கும் செயல் விளைவுகளின் கீழ், "**கோபாக்கினையின் பிள்ளைகள்**" அனைவரும் நித்திய சித்திரவதைக்குச் செல்லும் அவர்களுடைய பாதையில் செல்கிறார்கள் என்ற தவறான நம்பிக்கைக்குள் தேவனுடைய ஜனங்கள் விழுந்து விட்டார்கள். மேலும் அவர்கள் கொண்டிருந்த இரக்கம் மற்றும் அன்பின் அளவுக்குத்தக்கதாக இந்த எண்ணத்தினால் அவர்கள் மனதில் கடும் வேதனையடைந்தார்கள். அவருடைய வார்த்தையின் மீது இப்போது பிரகாசிக்கும் வெளிச்சத்தில் நாம் வேதவாக்கியங்களை மிகவும் அறிவுக்குப் பொருத்தமான வெளிச்சத்தில் நாம் வேதவாக்கியங்களை பார்க்க முடியும் என்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி கூறுகிறோம். "**அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாய் இருக்கிறது**" (ஏசா. 29:13) என்று தீர்க்கதரிசி அறிவித்ததைப் போல நாம் பார்க்க முடிகிறது; எதிராளியின் அந்த தவறான நம்பிக்கையின் கீழ் இந்த பயங்கரமான கொள்கையின் கதைக்குள் மிகவும் எளிமையான வார்த்தைகள் திரிக்கப்பட்டதால், அது அநேக இதயங்களை பாரப்படுத்துகிறது. மேலும் இது மிகப் பெரிய அளவிற்கு தேவன் மீதான உண்மையான அன்பைத் தடுக்கிறது. "சாவு" "அழிவு" "நாசம்" போன்ற எளிய வார்த்தைகளிலிருந்து அவற்றின் உண்மையான நேரடி அர்த்தம் பறிக்கபட்டதுடன், கர்த்தருடைய ஜனங்களை மேலும் குருடாக்குவதற்கும் கர்த்தருக்குள் அவர்களின் சொந்த இளைப்பாறுதல், ஆறுதல், சமாதானம் மற்றும் நன்றியறிதல் ஆகியவற்றை அழிப்பதற்கும் அந்த தப்பறைக்கு ஆதரவாக தலைகீழாக பொருள்படும்படி அர்த்தப்படுத்தப்பட்டது.

தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் அவர் நீதியான மரண தீர்ப்பை நம்முடைய இனத்துக்கு விதித்ததையும், குற்றவாளிகளை நீதியின்படி நடத்துவதையும் நாம் இப்போது பார்க்க முடிவதால் மகிழ்ச்சியடைகிறோம்;

ஆயினும் இரக்கமும் மனதுருக்கமும் நிறைந்த தேவன் கல்வாரியில் இயேசு செலுத்திய மாபெரும் மீட்கும் பொருள் கிரயத்தை வழங்கினார். தேவனுடைய இரக்கம் விசுவாசிகளுக்கு மட்டுமே பயன்படுவதாக இருப்பதையும், அதனால் வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே இயேசுவின் நாமத்தின் மூலம் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும், வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்பதை நாம் காண முடிகிறது. சுவிசேஷ யுகத்தில் சபை தெரிந்தெடுக்கப்பட்டதில் தெய்வீக தயவு நிறுத்தி வைக்கப்படுவதற்கு பதிலாக, அவர்களின் புரிதலின் கண்கள் மற்றும் அவர்களின் பாராட்டுக்கான காதுகளைத் திறக்கும் ஆசீர்வாதம் இப்போது வழங்கப்பட்டவர்களுடன் தேவனுடைய கிருபை முடிவடைவதற்குப் பதிலாக இது உண்மையில் இவைகளுடன் ஆரம்பமாகிறது என்றும், இறுதியில், இப்போது தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இரட்சிப்பை கொண்டு வந்த அதே தேவ கிருபை நம் இனத்தின் சந்ததியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கூட இரட்சிப்பின் வாய்ப்பைக் கொண்டுவரும் என்றும் கூடுதலாக நாம் காண முடிகிறது. நாங்கள் உலகளாவிய இரட்சிப்பை வலியுறுத்தவில்லை, ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்புக்கான உலகளாவிய வாய்ப்பை வழங்குவதே தெய்வீகத் திட்டம் என்று நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம். இதற்காகவே இயேசு கிறிஸ்து தேவனுடைய கிருபையினால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். மேலும் நம்முடைய (சபையின்) பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். (எபி. 2:9; 1 யோவா. 2:2).


எல்லா மனித புத்திக்கும் மேலான தேவ அன்பின் நீளங்கள், அகலங்கள், உயரங்கள், ஆழங்கள் பற்றி மெய்ப்பித்துக் காட்டுகிற மேலோட்டமான பார்வையை நாம் பெறும் போது கர்த்தரைப் பற்றிய உணர்வின் எப்படிப்பட்ட ஒரு பெரும் மாற்றம் நம் இருதயங்களில் வருகிறது. ஒரு மேலோட்டமான பார்வை கூட நம்மை மதித்துணர்ந்து போற்றுவதற்கும், நன்றி செலுத்துதலுக்கும், நன்றியறிதலுக்கும் தூண்டுகிறது, மேலும் நாளுக்கு நாள் நாம் தேவனுடனான கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் முன்னேற்றமாக வளர்ந்து கொண்டே செல்லும் போது, அவருடைய அற்புதமான அன்பு மற்றும் அற்புதமான திட்டத்தைப் பற்றிய பாராட்டுகள் அதிகரித்து, அதிகமதிகமாக நமது இருதயங்களின் ஒவ்வொரு பிளவுகளையும் நிரப்பி, தெய்வீக தரநிலைகளுக்கு முரணான அனைத்தையும் அதிகமதிகமாக வெளியேற்றுகிறது.

சிலர் கேட்பார்கள், தேவன் இறுதியில் ஒவ்வொரு உயிரினத்திற்கும் தம்மையும் தமது திட்டத்தையும் பற்றிய அறிவையும் வழங்குவதற்காக திட்டமிட்டிருந்தால், அவர் ஏன் இதை முதலிலிருந்தே செய்யவில்லை? நம்முடைய பாவங்களுக்காக மீட்கும் பொருள் கிரயமாகத் தம்முடைய குமாரனை அனுப்புவதற்கு முன்னே அவர் ஏன் 4000 வருடங்கள் கடந்துபோக அனுமதித்தார். அவரது அன்பான இரக்கம், அவரது கனிவான கிருபை, அவரது உண்மையான குணாம்சம், அவரது அற்புதமான திட்டம் ஆகியவற்றை நம் இனத்தின் ஒரு மிகச் சிறிய துணுக்கு பகுதியைத் தவிர வேறு யாருக்கும் தெரியப்படுத்தாமல் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் கடந்து செல்ல அவர் ஏன் அனுமதித்தார்? இப்பொழுதுள்ள யுகத்திலோஅல்லது முந்தைய யுகங்களிலோ கர்த்தர் தம்மை வெளிப்படுத்தாத நிலையில், இனிவரும் யுகத்தில் தம்மை அனைத்து மனுகுலத்துக்கும் வெளிப்படுத்துவார் என்று நாம் ஏன் நம்ப வேண்டும்?

இனிவரும் யுகத்தில் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தேவனுடைய அன்பும் இரக்கமும் முழுமையாக வெளிப்படுத்தப்படும் என்பதில் எங்களின் நம்பிக்கை ஊகங்களின் அடிப்படையில் அல்ல, மாறாக தெய்வீக வார்த்தையின் நேர்மறையான அறிக்கைகளின் அடிப்படையில் உள்ளது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இங்கே இந்த மிக முக்கியமான விஷயங்களை அவற்றின் விவரங்களில் விவாதிக்க இடம் அனுமதிக்காது. உண்மையில் பார்ப்பதற்கு கண்களும் கேட்பதற்கு காதுகளும் உள்ளவர்களின் கவனத்தை ஈர்ப்பதை விட இது போன்ற சந்தர்ப்பங்களில் நாம் இதைவிட அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களில் அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய திட்டத்தைப் பற்றி கூடுதலான அறிவூட்டப்படுதலுக்காக பசி தாகத்துடன் தேடுவார்கள் தட்டுவார்கள். மேலும் அப்படிப்பட்டவர்களிடமிருந்து கேட்டு ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளித்து, ஒவ்வொரு சந்தேகத்தையும் தீர்க்கும் முழுமையான தெளிவான சாட்சியங்களை அவர்களின் கைக்கு எட்டும் தூரத்தில் வைப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்; இது அவர்களின் காதுகளை மகிழ்ச்சியுடனும் துதியுடனும் தேவனுக்கு நன்றியுடனும் புதிதாக ஒலிக்கச் செய்யும். குறிப்பிட்ட நேரத்திற்குள் நம் பரலோக பிதாவின் திட்டத்தின் மகத்துவத்தை பற்றிய அற்புதமான குறிப்புரைகளை மட்டுமே நாம் இங்கே எடுத்துக் கூறமுடியும். ஏனெனில் அதுவே இறுதியில் முழு மனித இனத்தையும் சென்றடையும், மேலும் நம் இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும் தேவனை அவர்களுடைய பிதாவாக ஆவியிலும் சத்தியத்திலும் ஐக்கியம் கொள்வதற்கான ஒரு முழுமையான வாய்ப்பை அளிக்கிறது.

## அவர் கிருபை என்றுமுள்ளது

உலக ஞானம், தெய்வீக வழிநடத்துதலுக்கு முழுமையாகக் கீழ்ப்படிய விருப்பமற்றிருக்கிறது. சில சமயம் கேள்வியின் ஒரு பக்கமாகவும் அல்லது சிலசமயம் மற்றொரு பக்கமாகவும் தவறு செய்கிறது. சிலர் பிதாவின் நோக்கங்களைப் பற்றிய அவரது, சொந்த வார்த்தைகளை முகமதிப்பின் படி எடுத்துக் கொள்ள விருப்பத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொருவருக்கும் வழக்கமான



மனப்பான்மை தெய்வீக இரக்கத்தை வசனத்தின்படி அளவிடுவதற்குப் பதிலாக மனித தரநிலைகளின்படி அளவிடுவதாய் இருக்கிறது. அவர்கள் தேவனை கொடூர–மானவராகவும், இரக்கம் அற்றவராகவும் நினைக்–கிறார்கள்; மற்றும் கர்த்தரை அறிகிற அறிவு மற்றும் நீதியைப் போற்றும் திறன் ஆகியவற்றால் தயவு பெறாத அனைவரும் அதன்மூலம் நித்திய சித்திரவதைக்கு உட்பட்டவர்களாக குறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற இருண்ட யுகங்களின் போதனைகளைக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாகரீக சமூகத்தில் வாழும் தேவாலய மணிகளின் ஓசையைக் கேட்டும், வேதாகமத்தைப் பார்த்தும், வாழ்கிற ஒருவன் இந்த தொடர்பின் காரணமாக அவனுடைய பங்கில் மிகவும் பொறுப்புள்ளவனாகி பரிசுத்தவானுக்குரிய தன்மையிலிருந்து ஏதாவது தவறு செய்தால் உடனடி–யாகவும், நியாயமாக துன்பப்பட தகுதியாகிறான் என்று சிலர் வாதிடுகிறார்கள். மற்றவர்கள் நேர்மாறான உச்சத்திற்குச் சென்று அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் இறுதியாக மகிமையும், கனமும், சாவாமையும் அடையும் மட்டும் தேவன் தம்முடைய வேலையில் அமைத–லுடன் திருப்தியடைய முடியாது என்று வாதாடுகிறார்கள். இந்த இரண்டையும் விட வேதவாக்கியங்களின் கருத்துரை எவ்வளவு சிறந்ததாயிருக்கிறது.

வேதவாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள தேவ–னுடைய திட்டமானது யாரும் அறியாமையினால் இரட்சிக்கப்–படுவதில்லை, ஆனால் இறுதியில் அனைவரும் சத்திய அறிவை "**ஏற்ற காலத்தில்**" (1 தீமோ. 2:4–6) பெற்றுக் கொள்வார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்கிறது. ஒவ்வொரு–வரின் தனிபட்ட பொறுப்பு அவர்களுடைய அறிவின் அளவின் விகிதத்திற்கேற்ப இருப்பதுடன், சந்தேகமின்றி தெளிவாக அறியும் வரையிலும் அவர்கள் பகுதியளவு மட்டுமே பொறுப்பாளியாக இருப்பார்கள் என்று அது குறிப்பிடுகிறது. அனைவரும் தங்களுடைய சொந்த செயல்களுக்கு முழு பொறுப்பையும் ஏற்று கொள்ள வருவார்கள்; உலகிற்கு இறுதியில் தேவையான உதவிகள் வழங்கப்படும்; நல்ல நோக்கங்கள் தெய்வீக தரநிலை–களுக்கு இசைவான குணநலத்தின் முழு வளர்ச்சிக்கும் முன்னோக்கி கொண்டு செல்லப்படும்; மேலும் அப்படிப்–பட்டவர்களுக்கான வெகுமதி நித்திய ஜீவனும் பேரின்பமுமாய் இருக்கும். ஆனால் மாறாக, ஒரு தெளிவான மதிப்புணர்–வுக்கும் தேவையான எல்லா வழிகளிலும் முழுமையாக உதவி செய்யப்படுதலுக்கும் கொண்டு வரப்பட்டவர்கள் பொறுப்பாளியாவார்கள்; மேலும் அவர்கள் பாவத்தை விரும்பி அதை விருப்பத்துடன் பின்பற்றினால் அவர்கள்

> *"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." யோவான் 3:16.*

நித்திய அழிவாகிய இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள் என்றும் அது குறிப்பிடுகிறது.

கர்த்தராகிய இயேசுவை தங்களின் மீட்பராகப் பற்றிக்கொண்டு விசுவாசத்தை கடைபிடிப்பவர்களுக்கு இப்போது நீட்டிக்கப்பட்டுள்ள கர்த்தருடைய கிருபையானது, படிப்படியாக சபையின் ஊழியத்தின் மூலமாக ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்பை சென்றடையச் செய்யவும், மேலும் மனித குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவ–னுடைய ஈவாகிய நித்திய ஜீவனைப் பெறுதவற்கான முழுமையாகத் தேவையான, சரியான, நியாயமான அறிவு மற்றும் வாய்ப்பைப் பெறும் வரை பயன்படுத்தப்படுகிறது. (யோவா. 3:16).

அநேகர் இந்த கருத்தைத் தாக்கி மரணத்திற்கு அப்பால் எந்த கிருபையும் இல்லை என்று அறிவிக்கி–றார்கள். எங்கள் தேவன் தம்முடைய கிருபையினாலும் அன்பினாலும் மனித குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்–தினருக்கும் மீட்பை ஏற்படுத்தியிருக்கிறார். மேலும் அவர்கள் இந்த ஜீவியத்தில் தேவனுடைய கிருபையைப் பற்றி கற்றுக் கொள்ள வாய்ப்பு பெறாவிட்டால் மரணத்திலிருந்து எழுப்பப்–பட்ட பின்னர் ஆயிர வருட யுகத்தில் இந்த வாய்ப்பைப் பெறுவார்கள் என்று வலியுறுத்துகிறோம். நம்முடைய கர்த்தர் அறிவித்தது போல; "**பிரேதக்குழிகளிலுள்ள அனை–வரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள்** (இப்பொழுதுள்ள ஜீவியத்–தில் விசுவாச வழிகளிலான தெய்வீக பரிசோதனையில் தேர்ச்சி பெற்றவர்கள்) **ஜீவனை அடையும்படி எழுந்திருப்–பார்கள்**" பூரணப்படுத்தப்பட்டு மகிமை அடைந்திருப்பார்கள். தீமை செய்தவர்கள் (விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் தரநிலைக்கு வராதவர்கள்) ஓர் விழித்தெழுதலின் (awaken-ing) மூலம் வெளியே வந்து இறுதியில் நியாயத்– தீர்ப்பின் மூலம் உயிர்த்தெழுதலடைவார்கள் (resurrection). (யோவா. 5:28,29; Revised version).

## ஆயிர வருட நியாயத்தீர்ப்புகள் உடனடியானது

ஆயிர வருட யுகம் முழுவதும் சீர்திருத்தும் நியாயத்–தீர்ப்புகளின் மூலம் இந்த உயிர்தெழுதலடைவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அப்போது கர்த்தருடைய நியாயத்–தீர்ப்புகள் பூமியெங்கும் நடக்கும் மற்றும் பூச்சக்கரத்து குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள் என்று தீர்க்கத்தரிசி ஏசா. 26:9–ல் அறிவிக்கிறார். ஒவ்வொரு பாவமும் அதற்கு தகுந்த நீதியான பிரதிபலனை வெகுமதியாகப் பெறும் மற்றும்

நீதியை நோக்கிய ஒவ்வொரு முயற்சியும் ஆசீர்வாதத்தைப் பெறும். மேலும் ஜீவியத்தின் அனைத்து செயல்களுக்கும் வெகுமதிகளும், தண்டனைகளும் விரைவாக வழங்குவதன் விளைவு கீழ்ப்படிதலை வளர்க்கும்; மேலும் அது முழு உலகுக்கும் உதவியாக இருக்கும். கீழ்ப்படிந்தவர்கள் பாவம் மற்றும் மரண நிலைமைகளிலிருந்து மேலே, மேலே, உயர்வாக ஆயிர வருட யுகத்தின் முடிவில் அவர்கள் முழுமையான பரிபூரணத்தை அடையும் வரை எழுந்திருப்பார்கள். அவர்களின் எழுப்பப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதலானது நியாயத்தீர்ப்புகள், ஒழுக்கப்பயிற்சிகள் மூலம் முழுமையாக அந்த ஆயிர வருட யுகத்தில் நிறைவேற்றப்படும். மறுபுறம், அந்த சமயத்தில் யாரெல்லாம் முன்னேற்றம் அடைய மறுக்கிறார்களோ அவர்களெல்லாரும் இரண்டாம் மரணத்தில் ஜனங்களின் மத்தியிலிருந்து அறுப்புண்டு போவார்கள் என்று வேத வாக்கியங்கள் வெளிப்படையாகப் போதிக்கின்றன. (அப். 3:23).

தேவன் மனுக்குலத்துக்கு இரக்கமுள்ளவராய் இருக்க வேண்டும், அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் பாவம் மற்றும் மரணத்துடனான தற்கால அனுபவங்களிலிருந்து பயனடைவதற்கான ஒரு முழு வாய்ப்பை வழங்க வேண்டும் என்பது அநேகருக்கு நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது. அப்படிப்பட்டவர்கள் நம்முடைய தலைப்பு வசனத்தையும் அது ஒரு பகுதியாக அமைந்துள்ள அந்த முழு சங்கீதத்தையும் கவனிக்க வேண்டும். அது தேவனுடைய கிருபை என்றென்றும் நிலைத்திருக்கும் என்று அறிவிக்கிறது. இது இருபத்தாறு முறைகள் மீண்டும் மீண்டும் இந்த சங்கீதத்தில் கூறப்பட்டுள்ளது. எப்படிப்பட்ட வாக்குறுதியை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய கிருபை தற்பொழுதுள்ள ஜீவியத்திற்கோ அல்லது தற்போதுள்ள வாய்ப்புகள் மற்றும் தயவுகளுக்கோ வரையறுக்கப்படவில்லை. எப்பேற்பட்ட வாக்குறுதியை அவருடைய நற்குணத்திலிருந்து நாம் பெற்றிருக்கிறோம். அவர் முற்றுமுடிய இரட்சிக்க வல்லமையுள்ளவராய் இருப்பது மட்டுமல்லாமல், அதைச் செய்ய விருப்பமுள்ளவராகவும் இருக்கிறார். குறித்த காலத்தில் அனைவரும் சத்தியத்தின் அறிவை பெற்றுக் கொண்டு முழங்கால்கள் யாவும் முடங்கவும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணவும், மேலும் ஒவ்வொருவரும் தேவனுடைய கிருபையை ராஜ்யத்தின் புதிய ஏற்பாட்டின் கீழ் ருசிபார்க்க முழுமையான வாய்ப்பைப் பெறுவார்கள்.

தீர்க்கதரிசி மூலம் இந்த சங்கீதத்தில் வரிசையாகக் கூறப்பட்ட பல்வேறு விஷயங்களை நாம் விரைவாக பார்க்கும்போது, நமது சிந்தனைக்கான ஆகாரத்தைக் காண்கிறோம். நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். தேவன் எகிப்தியரின் முதற்பேறானவர்களை சங்கரித்தார், மேலும் எமோரியர்கள், அமலேக்கியர்கள், பெரிசியர்கள் போன்றவர்கள் இஸ்ரயேலருக்கு முன் கொல்லப்பட்டார்கள் என்பதை, தேவனுடைய கிருபை தற்கால ஜீவியத்துக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை ஆனால் அது என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நாம் நம்புகிற நிலைபாட்டில் இருந்து தவிர வேறு விளக்கம் கூற முடியாது. தேவனுடைய ஏற்ற காலத்தில் அவருடைய கிருபை கிறிஸ்துவின் மூலம் இவர்கள் அனைவரையும் கல்லறையிலிருந்து கொண்டு வரும். மேலும் உலகத்திலே வருகிற எந்த மனுஷனையும், பிரகாசிப்பிக்கிற அந்த மெய்யான ஒளி அவர்களுக்கு அறிவூட்டும் (யோவா. 1:9). மனித இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் கர்த்தருடன் இசைவுக்குள்ளாக வருவதையும், ஏதேனில் இழந்த நித்திய ஜீவனைப் பெறுவதையும், அவர்கள் அந்த இலக்கை நோக்கி செயல்பட்டால் அதை சாத்தியமாக்கும்.

## தேவனுடைய அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறது

"**அவருடைய கிருபை என்றுமுள்ளது**" என்பது இந்த தற்கால ஜீவியத்தின் அனைத்து சிரமங்களையும் சோதனைகளையும் விளக்கும் திறவுகோலாக இருப்பதுடன், இங்கு கற்றுக்கொண்ட பாடங்கள், குறித்த காலத்தில் அவைகளின் அர்த்தமில்லாமல் இருக்காது என்று நமக்கு உறுதி அளிக்கிறது என்று நாங்கள் சொல்கிறோம். "**சாகவே சாவாய்**" என்ற அவரது ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் 6000 வருடங்களுக்கு மேலாக முழு உலகமும் இப்போது தேவனுடைய வளைந்து கொடுக்காத நீதியைக் கற்றுக்கொண்டிருக்கிறது. விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலம் இரட்சிப்பு மற்றும் ஒப்புரவாகுதலின் செய்தியை சபை மட்டுமே கேட்டது. ஆனால் இறுதியில் சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் அதை அறிவார்கள் (எபி. 8:11). தேவனுடைய கிருபையினால் நம்முடைய இனத்தை ஏற்கனவே விலை கொடுத்து வாங்கினவரான மகா பிரதான ஆசாரியரான கிறிஸ்து இயேசு அவர் மூலமாகப் பிதாவிடம் வர விருப்பமுள்ள அனைவரையும் ஆசீர்வதித்து, குணமாக்கி உயர்த்துவார். "**கர்த்தரை துதியுங்கள் அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது!**"

இதில் ஏதும் பாவத்திற்கு ஒப்புதலாணை வழங்குகிறது என்று புரிந்து கொள்ளக் கூடாது, மாறாக, சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிகிறவர்கள் பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள். தேவனுடைய கிருபையைப் பற்றிய இந்த பார்வை நம்முடைய இனத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் சென்றடைய எதிர்காலத்திற்குள் விரிவடைகிறது. பூமியிலுள்ள மனித இனத்திலிருக்கும் தீமை மற்றும் பாவத்தை முற்றிலும் அழிப்பதற்காக தேவனுடைய நீதியுடன் தெய்வீக அன்பும் இணைந்து செயல்படுவதை இது காட்டுகிறது. நித்திய ஜீவனுக்கான ஒரே ஆதாரங்களான நீதி மற்றும் பரிசுத்தத்தின் தரநிலையை அது நிலைநிறுத்துகிறது, தற்கால வாழ்க்கையில் பாதி அளவில் மனம் மாறிய, மனம் மாறாத, அறியாமையுள்ள, மூடநம்பிக்கையுள்ள மற்றும் கொடிய

குணம் கொண்ட ஜனங்கள் மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற பல்வேறு கோட்பாடுகளை இது வெட்கப்படுத்துகிறது. வேதாகமத்தின் இந்த போதனை–யானது, உலக மக்கள் தொகையில் பெரும்பாலானோர் பல நூற்றாண்டுகளாக பரவலாக நம்பிக் கொண்டிருக்கும் உத்தரிப்பு ஸ்தலம் மற்றும் நித்திய வேதனையின் கோட்பாடுகளை வெட்கப்படுத்துகிறது. மாறாக, வேத–வாக்கியங்களின் நோக்கம் பகுத்தறிவு, நீதி, அன்பு ஆகிய வழிகளில் செயல்படும் தேவனுடைய கிருபையைக் காட்டுகிறது. அது மனித இனத்தின் ஒவ்வொரு உறுப்பின–ரையும் ஒரு மனரீதியான ஒழுக்க ரீதியான பொறுப்பிற்கும், ஒரு முழுமையான, பரிபூரணமான விடுதலைக்கும், ஆயிர வருடயுகத்தில் தேவனுடைய ஜனங்களின் ஆசீர்வாதங்கள், தயவுகள் மற்றும் சுதந்திரங்களுக்கும் கொண்டு வருகிறது.

மறுபுறத்தில், இந்த கிருபைக்கு அதன் வரம்புகள் இல்லாமல் இல்லை, இருப்பினும் பொதுவான தோற்றம் அவ்வாறு குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. நமது பாடத்தின் தலைப்பு வசனத்தில் என்றென்றும் என்று வழங்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை "ஓலம்" (olam) என்பதாகும்; அது முடிவில்லாதது என்பது போல் அது என்றென்றும் அல்ல, ஆனால் இன்னும் அதிக சொல்லர்த்தமாக ஒரு நிறுத்தற்புள்ளியை குறிப்பிடுகிறது. இந்த சரியான மொழிபெயர்ப்பின்படி நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் அறிவிக்கிறது. "அவருடைய கிருபை முழுமை–யடையும் வரை நீடித்திருக்கும்" இது எவ்வளவு மகத்துவ மானது! எவ்வளவு உன்னதமானது! கிறிஸ்து எல்லா கீழ்படியாமையையும் எல்லா பாவங்களையும் அழித்து தெய்வீக குணாம்சத்துக்கும் சாயலுக்கும் மீட்டெடுக்கப்பட விருப்பமும் ஆர்வமுமுள்ள அனைவரையும் உயர்த்தும், ஆயிர வருடங்களின் முடிவில் அது இருக்கும் என்று வேதவாக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. இதை கூறிய பிறகு, அப்போஸ்தலர் மேலும் கூறுகிறார். பின்னர் முழுமையான முடிவு வரும் (1 கொரி. 15:24). கடந்த 6000 வருடங்களாக நீண்ட காலமாக அநீதி உலகை ஆண்டு கொண்டது போல, ஆயிர வருடங்களும் கிருபை அதன் முழுமையான வாய்ப்பைப் பெற்றிருக்கும்.

இதற்கிடையில், தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி நிறுவப்படுவதற்காக நாம் இப்போது காத்திருக்கிறோம். மேலும் ஒவ்வொரு திசையிலிருந்தும் கர்த்தரின் பெரும் சேனையின் தாக்குதலுக்கு இடையில் சாத்தானின் தீமையான பேரரசு நிலைத்திருக்கப் போராடும் அதன் மரண வேதனையைப் பார்க்கிறோம். உலகெங்கிலும் உள்ள அரசாங்கத்தின் அநீதிகளிலிருந்து அவனுடைய ஆட்சி அதிகாரத்தின் ஒவ்வொரு அடையாளமும், மத ரீதியான விஷயங்களில் சீர்கேடும், தப்பறைகளும், டிரில்லியன் கணக்கான டாலர்களுடன் பழைய திராட்சை ரச துருத்தியின் தோல்களை ஒட்டுவதற்கு தேவைப்படுகிற உலகின் நிதி அமைப்பின் சமீபத்திய எழுச்சிகள் வரை, தாக்கப்படு–கின்றன. (லூக். 5:37 NIV). இந்த அழிவுக்கான முயற்சி சாத்தானின் ஆட்சிப்பரப்பின் ஒவ்வொரு இணைப்புப் பரப்பிலும் அது அழிக்கப்படும்வரை தொடரும். "**இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப் பண்ணுவேன். இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக அசைவுள்ள–வைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது.**" தேவனுடைய அசைத்தல்கள் அவைகளின் வேலையைச் செய்தபின், நீதியின் கோட்பாடுகளின் அடிப்படையின் மேல் நிறுவப்பட்ட சத்தியத்தின் தூய்மை மட்டுமே நிலைத்திருக்கும் (எபி. 12:26,27). பூமியை அசைத்தல் என்பது மனித சமுதாயத்தின் சமூக ஒழுங்குமுறைக்கும், வானங்கள் என்பது ஆவிக்குரிய ஆட்சி அதிகார வல்லமைகளாக, பூமியில் தற்போது ஆட்சி செய்யும் மத அமைப்புகள் ஆகியவற்றுக்கும் பொருந்தும்;

மீண்டும் ஆயிர வருட யுக ராஜ்யத்திற்கு இப்போது திரும்புவோம், அப். பவுல் தொடர்கிறார் "**அதன் பின்பு முடிவு உண்டாகும்,**" எல்லா கீழ்ப்படியாமையும் கட்டுபாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருக்கும்போது, உலகத்தின் ஆட்சியை, இராஜ்யத்தை "**தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்–கொடுப்பார்**" (1 கொரி. 15:24). கல்வாரியில் மாபெரும் பாவநிவாரண பலியில் ஆரம்பிக்கப்பட்ட கிருபையின் வேலை, மீட்பரின் ஆட்சியின் மூலம் சாத்தானை கட்டுவ–தற்கும், தீமையை அழிப்பதற்கும் அப்போது கொடுக்கப்படும் அறிவு மற்றும் வாய்ப்புகளின் கீழ் தெய்வீக தயவை ஏற்றுக்கொள்ள விரும்பும் எவரையும் உயர்த்துவதற்கும், முழுமையாக முடிக்கப்பட்டிருக்கும். பின்னர் நிச்சயமாக, நம்முடைய பரலோக தகப்பனின் குணாம்சத்தையும், திட்டத்தையும் நாம் அறிந்து கொண்டு வரும் விகித அளவில், அதே விகித அளவின்படி அவருடைய வார்த்தையின் விலைமதிப்பற்ற வாக்குறுதிகள் அனைத்தையும் நாம் மதித்துணர்ந்து பாராட்டலாம். பிரதிஷ்டையாளர்களுக்கு நம்முடைய பாடவசனம் அதன் மிகவும் ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது. "**கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது.**" ***

### தேவனுடைய எல்லையற்ற அன்பு

**நாம் பெருங்கடலை மையினால் நிரப்பக்கூடுமானால்,**
**புல்லின் ஒவ்வொரு இதழும் ஒரு இறகு பேனாவாக இருந்து,**
**ஒவ்வொரு மனிதனும் தொழில் ரீதியான எழுத்தராக இருந்து**
**உலகம் முழுவதும் காகிதத் தோலாக உருவாக்கப்படுமானால்,**
**பரலோக தேவனுடைய அன்பை எழுதிட முனைகையில்**
**அக்கடல் முழுவதும் வடிந்து காய்ந்து விடும்;**
**ஆகாயத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை நீட்டினாலும்,**
**அச்சுருளில் முழுவதும் அடக்கிட முடியாது.**

# மேசியா–ஓர் மனப்பூர்வமான பலி

Messiah - A Willing Sacrifice

**“கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்” ஏசாயா 53:10.**

மேசியா – தேவனுடைய தாசன்

*ஜுலை ஆகஸ்ட் 2009 பத்திரிக்கை தொடர்ச்சி...*

தேவன் தம்முடைய மகா சிறந்த ஊழியக்காரனான தம்முடைய மேசியாவின் ஒரு அடையாளமான கோரேஸை குறித்து, “**அவன் என் மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும்: தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி,**” “**கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, அவன் வலதுகையைப் பிடித்து கொண்டு** [பலப்படுத்தி] **அவனுக்குச் சொல்லுகிறதாவது ... நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வை–யாக்குவேன்.**” (ஏசா. 40:4): “**வெண்கலக் கதவுகளை உடைத்து இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்...**” (ஏசா. 44:28—45:3) என்று சொன்னார். இந்த தீர்க்க- தரிசனம் பெர்சியாவின் கோரேசுக்கு வரையறுக்கபட்ட அளவில் நிறைவேறியிருந்தாலும், மேலே பார்த்தபடி இது நிறைவேறு–தலான கோரேசான தேவனால் அபிஷேகம் செய்யப்–பட்டவரும் அவருடைய மேய்ப்பனும் அவருடைய ஊழியக்காரருமானவரில் மிகப் பெரிய அளவில் நிறைவேற்றம் அடைந்தது.

மேசியாவின் கையில் வெற்றியடையும் தேவனுக்குப் பிரியமான காரியம் என்ன? இது சுருக்கமாக ஏசா. 42:1,6,7,16 –ஆகிய வசனங்களில் சுட்டிகாட்டப்பட்டுள்ளது; கோரேசை பற்றி பேசுவதைப் போன்ற சிலவார்த்தைகள்: “**இதோ! நான் ஆதரிக்கிற என் தாசன் நான் தெரிந்து–கொண்டவரும்** [நான் தேர்ந்தெடுத்தவர்] **என் ஆத்துமாவுக்கு பிரியமானவரும் இவரே! என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன், அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை** [சத்தியத்தை] **வெளிப்படுத்துவார். நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிருந்தும், இருளில் இருக்கிறவர்களை சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும்: கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து** [பலப்படுத்தி], **உம்மைத் தற்காத்து உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.**” (ஒப்பிடுக. ஏசா. 49:9,10: தேவனுடைய தாசன் கல்லறை என்னும் சிறையில் அடைக்கப்பட்டவர்களை விழித்தெழச் செய்து சத்திய வெளிச்சத்தால் ஆசீர்வதிப்பார். – தானி. 12:2; ஓசியா 13:14; ஏசா. 11:98; 30:26; 61:1-3). குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்கு தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டுவந்து, [இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல்] அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வை–யுமாக்குவேன், [ஆதாம் வீழ்ச்சி அடைவதற்கு முன்பு பெற்றிருந்த மனுஷீக பரிபூரணத்திற்கு – பரிசுத்தவழி என்னும் பெரும்பாதையில் அவர்கள் முன்னேறி வரும்போது – ஏசா. 35:8 அவர்களின் தப்பறைகளுக்குப் பதிலாக சத்தியமும், அவர்கள் பாவங்களுக்குப் பதிலாக நீதியும் வைக்கப்பட்டு அவைகள் நீக்கப்படும்.]

தேவனுக்குப் பிரியமானது எசே. 34:23, 24,31; 37:24,25,27,28 மற்றும் ஏசா. 40:11-ல் சுட்டிக்காட்டப்–பட்டுள்ளது. “**அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது** (தேவனுக்குப் பிரியமான, அவருடைய மேசியா) **என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாய் இருக்க ஏற்படுத்துவேன். இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார். கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்: கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்.**” “**என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார், அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்: அப்பொழுது அவர்கள் என் நியாயங்களில் நடந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு அவைகளின் படியே செய்து நான் என் தாசனாகிய யாக்கோபுக்கு கொடுத்ததும், உங்கள் பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள்: அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள், என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார். மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார்: ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து தமது மடியிலே சுமந்து, தமது கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.**”

## இஸ்ரயேல் விடுதலையாக்கப்பட்டது

இந்த தீர்க்கதரிசனம் தாவீது மரித்து நீண்ட நாட்களுக்குப் பிறகு எழுதப்பட்டது; தேவனுடைய மிகவும் அருமையான பிரியமானவர், அவருடைய தாசன், அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர் – மேசியா பூமியில் ஆட்சி செய்யும்போது தேவன் இஸ்ரயேலருடன் நித்தியமான “சமாதான உடன்படிக்கை” செய்து, “அவர்–களின் நுகத்தின் கயிறுகளை” அறுத்துப் போடுவார் என்று

வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகிறது. இதைத் தான் "என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும் நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் அப்படியே என் பரிசுத்த ஸ்தலம் அவர்கள் நடுவிலே என்றென்றைக்கும் இருக்கும் போது, நான் இஸ்ரயேலை பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று ஜாதிகள் அறிந்துகொள்வார்கள்." "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்." (எசே. 34:31).

## மேசியா உயர்த்தப்பட்டார்

அவரது முதல் வருகையிலிருந்து தேவனுடைய தாசன் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார். அவர் "**கர்த்தருடைய புயமாக**" அவருடைய செம்மறி ஆடுகளை விசேஷித்த வழியில், போஷித்து அவைகளை விசேஷமாக கவனித்து மேய்த்து வழிநடத்தி வருகிறார். (மீகா 5:4; யோவேல் 2:24-27). அந்த "**வானத்து நட்சத்திரங்களாக**" - ஆபிரகாமின் பரலோகத்துக்குரிய வித்தாக அவர்கள் அவரிடத்தில் ஒன்று சேருவார்கள் (ஆதி. 15:5; 22:17; 26:4; யாத். 32:13). மிகவும் உயர்த்தப்பட்ட தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய பரலோகத்துக்குரிய மேசியாவுக்கு, ஆபிரகாமின் மகனாகிய, ஈசாக்கில் சித்தரிக்கபட்டது போலஓர் மணவாட்டி இருக்க வேண்டும் என்றும் (ஏசா. 61:10; ஈசாக்கிற்கு மணவாட்டி கொண்டு வரப்பட்டது ரெபேக்காளில் சித்தரிக்கப்பட்டுள்ளது), ஒரு சிறுமந்தை, அவருடைய உடன் சுதந்தரர்களாக (அவருக்கு சமமாக இல்லாவிட்டாலும் அல்லது ஈடுபலியின் புண்ணியத்துக்கு எந்த பங்கையும் கொடுக்கவில்லை என்றாலும்) ராஜ்யத்தில் ஆசாரியக் கூட்டமாகவும் "**இரட்சகர்களாகவும்**" போதிப்பவர்களாகவும் இருப்பார்கள். (தானி. 7:27; சக. 3; சங். 132:8-18; ஒபதி. 21; சங். 22:30,31). "**கன்னியருக்கு தொகையில்லை**" (உன்னதப்பாட்டு 6:8) என்றதுபோல அங்கே மணவாட்டியின் ஊழியக்காரிகளும், அவருடைய மணவாட்டியின் தோழிகளும் கூட இருப்பார்கள், இவர்கள் நிறைவேறுதலான லேவியர்களாய் (மல். 3:1-3) தேசத்தில் எந்த சுதந்தரமும் இல்லாமல் (எண். 18:20-24) "**வானத்து நட்சத்திரங்களோடு**" எண்ணப்பட்டிருக்கிறார்கள்.

மேசியாவிடம் மற்ற ஆடுகளும் இருக்கின்றன. அவர்கள் பரலோக தொழுவத்துக்குரியவர்கள் அல்ல அவர்களையும் கூட அவர் கொண்டு வர வேண்டும். அவர்கள் ஆபிரகாமின் பூமிக்குரிய வித்தாக "**பூமியின் தூளை**" போலவும் "**கடற்கரை மணலை**" போலவும் இருப்பார்கள். (ஆதி. 13:15,16; 22:17; 28:14; 32:12; எரே. 33:22). இதில் விரிவான கருத்தில் இரட்சிக்கப்பட்ட உலக மனுக்குலம் முழுவதும் அடங்கும். அவர்களுடைய நித்திய ஜீவனை பரலோகத்தில் அல்ல, ஆனால் இந்த பூமியில் - மனிதர்கள் மத்தியில் நீதி வாசமாயிருக்கும் சமுதாய ஒழுங்கு முறையுள்ள, என்றென்றும் நிலைத்திருக்கும் "புதிய பூமியில் அவர்கள் பெறுவார்கள்." (ஏசா. 60:21; 65:16-19,25; 66:22,23; சங். 37:9-11,22, 29,34,38) "***அக்காலத்திலே எருசலேமை கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள், சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதனிடமாக சேர்வார்கள், அவர்கள் இனி தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி*** [முரட்டாட்டமாக] **நடவார்கள்**" (எரே. 3:17).

தேவன் மனுக்குலத்திற்கு எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதங்களை ஏற்பாடு செய்திருக்கிறார்! இது இஸ்ரயே-லின் மேசியாவால் நிறைவேற்றப்படும் ஒரு அற்புதமான இரட்சிப்பின் செய்தியாகும். அதை அவர்கள் பார்க்க வரும்போது அவருக்கு "***சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்***" என்று அறிவிக்கப்படும். ஏனெனில் சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ள-வைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்பரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

## ஈடுபலி (மீட்கும் பொருள்)

தகப்பனாகிய ஆதாமுக்காகவும் அவர் பாவம் செய்தபோது அவரது இனப்பெருக்க திறனில் இருந்த சந்ததிக்காகவும், நீதியின் தேவையை திருப்தி செய்வதற்கு மீட்கும் பொருள் கிரயமாகத் தேவைப்பட்டதெல்லாம் ஈடுபலியாக மேசியாவின் பலிதியாகம் செய்யபட்ட மனுஷீக ஜீவனாகும். முதலாவது பரலோக வித்திற்காக பரலோக அழைப்பு மற்றும் இரட்சிப்பும் (லேவி. 16:11) இருந்த அந்நாட்களிலே அவருடைய "ஊழியக்காரர்கள்" (அவருடைய உடன் சுதந்தரர்கள்) மற்றும் அவருடைய "ஊழியக்காரிகள்" ("கன்னியருக்கு தொகையில்லை") (யோவேல் 2:29) மற்றும் இரண்டாவதாக ஆபிரகாமின் பூமிக்குரிய வித்து மற்றும் பொதுவான மனுக்குலத்திற்காக ("ஜனத்தின்"-லேவி. 16:15), மேசியாவின் ஆயிர வருட யுகத்தின் ஆசீர்வாதமும் சமாதானமும் நிறைந்த ஆட்சியின் போது அது செய்யப்படும். இறுதியில் தேவனுடைய சித்தம் முழுமையாக நிறைவேற்றப்படும் - காலங்கள் நிறைவேறும் போதுள்ள யுகத்தில் அவர் பரலோகத்திலிருக்கிறவைகளும் (எபே. 1:9) பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலத்தை-யும் ஒன்றாக மேசியாவுக்குள் கூட்டிச்சேர்ப்பார்.

## இஸ்ரயேலின் செய்தி

தேவன் முழு தீர்க்கதரிசனத்தின் சுருக்கத்தையும் (ஏசா. 52:13-15) ஒரு முன்னுரையில் கொடுத்தார், அதில் மேசியாவின் நிராகரிப்பு மற்றும் பாடுகள், அவருடைய



“நான் உன்னை கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்…” (ஆதி.22:17,18)

மேலான உயர்த்தப்படுதல், தேசங்களுக்கான அவருடைய ஆசீர்வாதமும், ஆகும். எனவே மனந்திரும்புதலும் இஸ்ரயேலின் அறிக்கையையும், சாட்சியையும் நம்புவது இங்கே அதன் முடிவாக இருக்கும் என குறிப்பிடுகிறார். (ஏசா. 53:1-10). தேவன் இஸ்ரயேலர்களின் செய்திக்கு ஒப்புதலையும் உறுதி செய்தலையும் சுருக்கமான (ஏசா. 53:11,12) ஒரு அறிக்கையாகக் கொடுத்துள்ளார். இந்த கடைசி இரண்டு வசனங்களில், “தீர்க்கதரிசனம் நீண்ட காலமாக நிராகரிக்கப்பட்ட தேவனுடைய தாசனைப் பற்றிய இஸ்ரயேலின் பின்னோக்கி பார்த்து ஒப்புகொள்ளும் நிலைப்பாட்டை விட்டுச் செல்வதுடன், அந்த ஊழியக்காரனை தம்முடையவன் என்று ஏற்றுக் கொண்ட தேவனுடைய தீர்க்கத்தரிசன அங்கமாக மீண்டும் ஒருமுறை மாறுகிறது” என்று டெலிட்ஸ்ச் (Delitzsch) விளக்கமளிக்கிறார்.

இந்த மகிமையான உச்சக்கட்டத்தில் தம்முடைய ஊழியக்காரன் அநேகருக்காக பதிலாளாக பாடநுபவித்து மரித்ததையும், அவர்களின் அக்கிரமங்களை எல்லாம் தாமே சுமந்ததையும், அதன் பலனாக உயர்த்தப்பட்டதையும், அதன் பலன்களினால் திருப்தியாவதையும், அக்கிரமக்காரர்களுக்காக அவர் வேண்டிக் கொண்டதையும், அநேகரை நீதிமான்களாக்கியதையும் தேவன் மீண்டும் முன் வைப்பார்.

## மேசியா திருப்தியாவார்

“**அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனை கண்டு திருப்தியாவார்**” அல்லது மேலும் அதிக சொல்லர்த்தமாக “**ஏனெனில்** (முடிவு) **தமது ஆத்துமாவின் பிரயாசத்தினால்** [அதன் விளைவாக] **அவர் கண்டு திருப்தியாவார்.**” தேவனுடைய தாசரின் வருத்தம், அவருடைய ஜீவன் மாம்சத்தில் மரணத்துக்கு உட்படுத்தப்பட்ட போது நிசான் 14, கி.பி. 33-ல் இஸ்ரயேலர்களின் 70-வது வார தயவின் மத்தியில் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார் என்று தானி. 9:23-27-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மற்ற காரியங்கள் மத்தியில், “**அக்கிரமத்தை நிவிர்த்தி செய்தல்,**” “**நித்திய நீதியை**” வருவித்தல் (அடையாளமான ஜனமான, இஸ்ரயேலருக்காக அடையாளமான பலிகளினாலே வருடந்தோறும் பாவ நிவிர்த்தி செய்யப்பட்டதற்குப் பதிலாக பாவத்திலிருந்து நித்தியமாக நிவிர்த்தி செய்யப்பட்டது) மற்றும் “மகா பரிசுத்தமான” அபிஷேகம் பரம அழைப்பின் பாக்கியங்களில் சேர்வதற்காக யூத தேசத்தின் பரிசுத்தமானவர்களில் இவர்கள் மிகவும் தூய்மையாயும் தகுதியும் பெற்றவர்கள் - அப்போஸ்தலர் பேதுருவின் முதல் திறவுகோல். (ஏசா. 10:22,23).

பாவத்திற்காக மேசியாவின் சிறந்த மீட்கும் பொருள் பலியாக அவர், தமது ஆத்துமாவை - பூரண மனுஷீக ஜீவனை தாமே பலியாகக் கொடுத்ததின் பலனை தேவனுடைய தாசனாகிய அவர், கண்டு திருப்தியாவார், (எபிரேய வினைச்சொல் சபியா (sabea) என்பது இங்கே உபயோகப்படுத்தபட்டுள்ளது. இவ்வார்த்தை, வெறுமனே திருப்தி என்பது மட்டுமல்லாமல், விரும்பியதை முழுமையாகக் கை வரப்பெறுதல் அல்லது மனநிறைவடைதலைக் குறிக்கிறது). ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி அவர் ஒரு சந்ததியை வித்தைக் காண்பார் (சங். 22:30), அவர் “**என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசைக்**” காண்பார். (சங். 21:4). அவர் நமக்காக தன்னுடைய மாம்ச சரீரத்தில் மரித்து, ஜீவனை அருளுகிற தெய்வீக ஆவிஜீவியாய், தேவனுடைய வலது கரத்தினால் உன்னதங்களில் உயர்த்தப்பட்டு அங்கே அவர் நித்திய கால வாழ்வினால் திருப்தியாவார். (சங். 110:1; 91:14-16). மேலும் “**கர்த்தருக்கு சித்தமானது**” “**அவர் கையினால் வாய்க்கும்**” என்று முழுமையாகவும் இறுதியாகவும் நிறைவேற்றம் அடைந்த அனைத்தையும் கண்டு திருப்தியாவார்.

இது, ஏற்கனவே பார்த்தது போல இரட்சிப்பில் அவருடைய மணவாட்டியும், (1,44,000 பேரான மிகச் சிறந்த யூதர்கள் மற்றும் மிகச் சிறந்த புறஜாதிகளால் ஆன நிறைவேறுதலான ஆசாரியர்கள்) அவருடைய மணவாட்டியின் தோழிகளும் (கீழ்ப்பட்ட உண்மையுள்ள சீஷர்களான திரள் கூட்டம் - நிறைவேறுதலான லேவியர்கள் வெளி. 7:9-17) மற்றும் “முன்னோர்களான” மூப்பரான பாத்திரவான்களும் (ஏசா. 24:23) அவர்களோடு கூட பங்கு கொள்ளுகிற வாலிபரான பாத்திரவான்களும் (இவர்கள் தற்கால யுகத்தின் முடிவில் ஒன்றுசேர்க்கப்பட்டவர்கள். யோவேல் 2:28) அடங்குவார்கள். அவர் “**அவர்களை பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பார்.**” (சங். 45:16).

பின்னர் தம்முடைய ஒன்று கூட்டப்பட்டவர்களும், விசுவாசிப்பவர்களுமான இஸ்ரயேலர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வருவார்; “**அவர் இஸ்ரயேல் குடும்பத்துக்காக தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார், பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.**” “**எருசலேமின் பாழான ஸ்தலங்களே, முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடுங்கள்! கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல் செய்து எருசலேமை மீட்டுகொண்டார்.**

**எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை** [தம்முடைய மேசியாவை] **வெளிப்படுத்துவார், பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்." "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." "அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பி வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள், சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்"** (சங். 98:3; ஏசா. 52:9,10; 11:9; ஆபகூக் 2:14; எண். 14:21; ஏசா. 51:11) என்று அவர்கள் பாடுவார்கள்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் இதையே தேவனுடைய உண்மையுள்ள உயர்த்தப்பட்ட தாசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் பார்த்து அதில் நிறைவாக திருப்தியாவார். இது அவருடைய ஆத்தும வருத்தத்தின் மகிமையான விளைவு ஆகும்! ***

# பாவங்களும் அவைகளுக்கான தண்டனைகளும்

Sins and their Punishments

அடிக்கடி கேட்கப்படும் கேள்வி, "திருடர்கள், கொலை பாதகர்கள் மற்றும் பிற குற்றவாளிகளுக்கு தனிவகையான தண்டனை உள்ளதா, அல்லது அவர்கள் மனந்திரும்பினால் தங்கள் வாழ்நாள் முழுவதும் சரியானதை செய்ய முயற்சித்தவர்களுடன் கூட ராஜ்யத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவார்களா?" இந்த கேள்வியை இரண்டு வித நோக்கு நிலைகளில் பார்க்கலாம். தேவன் தாமே சரி, தவறு என்று மிகச் சிறப்பாக தீர்மானிப்பவராய் சிறந்தவராய் இருக்கிறார். சரியான எல்லாவற்றையும் தேவன் அங்கீகரிக்கிறார், தவறான எல்லாவற்றையும் தேவன் நிராகரிக்கிறார். தேவனால் அங்கீகரிக்கப்பட்ட காரியங்கள் அனைவருக்கும் நன்மையான, உதவிகரமான, ஆதரவான காரியங்களாக இருக்கும் தேவனால் நிராகரிக்கப்பட்ட காரியங்கள் அனைவருக்கும் தீமையான, அநீதியான, தீங்கிழைக்கும் காரியங்களாக இருக்கும். தேவன் சில விஷயங்களைப் பாவம் என கண்டிக்கிறார், ஏனென்றால் அவர் நமக்கும் அல்லது மற்றவர்களுக்கும் அந்த அநீதியான அல்லது தீங்கிழைக்கும் காரியங்களில் இருந்து நம்மை விடுவிக்கிறார். பாவம் செய்கிறவன் எவனும் முதலாவது தெய்வீக கட்டளையை மீறுகிறான்; அவர்கள் செய்த தவறின் அளவுக்குதக்கதாக குறிப்பிட்ட தண்டனை நிச்சயமாக இணைக்கப்பட்டுள்ளது. "தாங்களே தீ வினையை விதைப்பவர்களின்" சில பேரை குறித்து நாம் பேசலாம். இந்த சொற்றொடர் எதை குறிக்கிறது? அவர்களின் ஆரோக்கியம் மற்றும் சந்தோஷத்திற்கு மட்டுமல்ல, ஆனால் பெரும்பாலும் நிச்சயமாக மற்றவர்களுடையதற்கும் தீங்கிழைக்கும் துன்மார்க்க பழக்கவழக்கங்களை அவர்கள் இப்போது செய்கிறார்கள் என்பதை அர்த்தப்படுத்துகிறது. ஏனெனில் பாவத்தை நடைமுறை செய்வதால் அவர்கள் நிச்சயமாக தங்களின் மனம் மற்றும் சரீரம் இரண்டின் மீதும் சீர்கெடுதலைத் தாங்களே கொண்டு வருகிறார்கள். அதன்படி பாவம் இயற்கையான வழிமுறையில் அதற்குரிய வெகுமதியைக் கொண்டு வரும். பாவம் செய்கிறவன் எவனும் துன்பப்படுவான் என்பது பொதுவான கட்டளை. எனினும் அந்த கட்டளையைத் தவிர தேவன் ஒரு குறிப்பிட்ட கட்டளை மற்றும் குறிப்பிட்ட தண்டனையை அதன் கட்டளைகளோடுகூட செல்லும்படி கொடுத்திருக்கிறார்.


## கள்ளர்களும் கொலைபாதகர்களும்

தேவனுடைய நீதியின் தரநிலை மனிதனின் தற்போதைய தரநிலையை விட மிக அதிகமாக மேலானது. நம்முடைய கர்த்தர் "திருடன்" "விபசாரக்காரன்" "கொலைபாதகர்" முதலிய வார்த்தைகளுக்கு மிக அருமையான அர்த்தங்களைக் கொடுத்துள்ளார். தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் எவனும் கொலைபாதகன் என்றும், அடுத்தவரின் மனைவியை இச்சையோடு பார்க்கிறவன் எவனும் விபசாரம் செய்தாயிற்று என்று போதித்தார். (மத். 5:22,28). இவை மிக சிறந்த வேறுபாடுகள். மேலும் "என் பணப்பையைத் திருடுகிறவன் குப்பையை திருடுகிறான்; ஆனால் என்னிடமிருந்து என் நல்ல பெயரை பறிப்பவர் தன்னை வளப்படுத்தாததை என்னிடம் இருந்து பறித்து என்னை உண்மையாகவே ஏழையாக்குகிறார்" என்று சேக்ஷ்பியர் சொல்வதை நாம் அனைவரும் நிச்சயம் ஒப்புகொள்ள வேண்டும். அநேக ஜனங்களுக்கு மற்றவரின் நல்ல பெயரை திருடிய குற்ற உணர்வு உள்ளது; வேறு பலருக்கு அவர்கள் மற்றவர்களை வெறுக்கிறார்கள் என்ற கருத்தில் கொலை செய்த குற்ற உணர்வு உண்டு. யார் கொடூர குற்றவாளிகள் என்பதைத் தீர்மானிக்கும் நிலை வரும்போது கொலைபாதகர், திருடர்கள், விபசாரக்காரர்கள் என்று தீர்ப்பளிக்க நாம் தகுதியற்றவர்கள், ஏனென்றால் ஒவ்வொருவரின் மனதின் குணங்களையும், என்ன பலவீனங்களுடன் பிறந்தார்கள் என்பதையும் நம்மால் அறிய முடியாது. தேவன் ஒருவர் மட்டுமே இந்த விஷயங்களில் எந்த அளவில் தவறு உள்ளது

என்று கூற முடியும். வெகுசிலர் மட்டுமே இயற்கையாகவே நல்லவர்கள்; மற்றவர்கள் பிறக்கும் போதே குறைவான குணபண்புகளுடன் இருக்கிறதாகக் காணப்படுகிறது. இயல்பாகவே தன் சகோதரரோடும் அல்லது யாரிடமோ கோபம் கொள்ளாத சிலர் உண்மையில் அல்லது உருவகமாகவோ கொலை செய்யும் நோக்கத்தில் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் சகிப்பு தன்மையின் குணத்துடன் பிறந்தவர்கள். இவர்கள் பிறந்த போது பெற்றிருந்ததை விட எந்த சிறந்த குணப்பண்புகளையும் வெளிப்படுத்தாதிருக்கலாம். மற்றவர்கள் அவர்கள் பிறந்த நிலையின் காரணமாக சிறந்த குணங்களை வெளிப்படுத்தலாம். பிறருக்கு தீங்கு செய்பவர்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உலகம் கற்று கொண்டது. நியூயார்க் மாநிலத்தின் ஜனங்களின் தீர்ப்பு கொலை செய்பவர்கள் யாரும் சட்டப்படி வெளியில் இருக்கக்கூடாது. ஒரு கொலைகாரன் சமூகத்தில் அனுமதிக்க கூடிய பாதுகாப்பான நபர் அல்ல என்பதால், அவர் சிறையிலடைக்கப்பட வேண்டும். அவர் சிறையில் அடைக்கப்படுகிறார் அல்லது தண்டனையைப் பொறுத்து மரண தண்டனை அளிக்கப்படுகிறார். இது தேவனுடைய தீர்ப்புக்கு அப்பாற்பட்ட பொதுவான தீர்ப்பாகும். அவனுக்கும் பொதுவான உலகிற்கும் சிறந்த காரியம் அவன் ஹேட்ஸ் - ஷியோல் - மரணத்தின் மகா நிலைமைக்குச் செல்வது தான். அங்கே வேறு யாரையும் கொலை செய்ய முடியாது. வேதவாக்கியங்களும் இது சம்பந்தமான நியூயார்க் நாட்டின் சட்டத்தை ஒப்புக்கொள்கிறது. ஏனெனில் கொடூரமான தவறுகளைச் செய்யும் மனிதன் நிச்சயமாக தண்டனை பெற வேண்டும்.

## தேவன் நியாயாதிபதிகளுக்கு பயிற்சி அளித்தார்

நியாயத்தீர்ப்பு அளிப்பவரின் உத்தியோகத்தை எடுத்துக் கொள்ளும் திறமையுள்ளவர்களாக நாம் இல்லை. தற்போது காவலில் வைக்கப்படாதவர்கள் சிலரை விட காவலில் வைக்கப்பட்டவர்கள் எவ்வளவு அதிகமான தண்டனைக்கு தகுதியானவர்கள் என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும். காவல் பண்ணப்பட்டவர்களின் குற்றம் வெளித்தோற்றத்தில் பெரிய குற்றமாக இருக்கலாம். சிறையிலடைக்கப்படாதவர்கள் தெய்வீக நிலைபாட்டில் இருந்து அதைப் போன்ற குற்றவாளியாக அல்லது அதற்கு அதிகமாகவும் இருக்கலாம். ஏனெனில் அவர்கள் அதிக வெளிச்சத்திற்கும் திறமைக்கும் எதிராக பாவம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் மட்டுமே கடந்தகால விஷயங்களில் தீர்ப்பளிக்க முடியும், வேறுயாராலும் முடியாது தேவன் மற்றொரு வகுப்பாரை நியாயாதிபதிகளாகத் தெரிந்து கொண்டார். இது எதிர்கால ஆயிர வருட யுக நியாயத்தீர்ப்பு நாளில் உலகத்தை நியாயந்தீர்க்க முழு தகுதியைப் பெற்ற ஒரு பரிசுத்த வகுப்பார் ஆவர். இவர்களே


“நீர் குருடருடைய கண்களை திறக்கவும், கட்டுண்டவர்களை காவலிலிருந்தும், இருளில் இருக்கிற–வர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும்.” (ஏசா. 42:6)

நான் நியாயாதிபதிகளாகத் தெரிந்து கொண்டவர்கள் என்று அவர் சொல்கிறார். “**பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்–தீர்ப்பார்களென்று அறியீர்களா?**” (1 கொரி. 6:2) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். உலகத்தின் நியாயத்தீர்ப்பு தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் இப்போது இல்லை, ஆனால் மனுக்குலம் கல்லறையிலிருந்து திரும்பக் கொண்டுவரப்படும் மகா பெரிய விழித்தெழுதல் நடந்த பின்பு இது நடைபெறும். கர்த்தரால் போதிக்கப்பட்டவர்கள் யாரும் இயல்பாகவே அபூரணத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் அல்ல, ஆனால் மற்றவர்களுக்கு இருக்கும் அதே குறைபாடுகள் அநேகம் இவர்களிடமும் உண்டு. ஆயினும்கூட அவர்கள் தங்கள் மனம் மறுரூபமாக்கப்படுவதன் மூலம், சுயக்கட்டுப்பாட்டைப் பெறுவதற்கும் அல்லது வேதவாக்கியங்கள் சொல்வது போல் ஜெயம் பெறுவதற்கும், தங்களை தாங்களே நியாயந்தீர்க்கவும் நாடுகிறார்கள். மகிமையும் வல்லமையும் உள்ள பரலோக ராஜ்யத்தில் கர்த்தருடன் இருக்கும் அனைவரும் ஆயிர வருட யுகத்தின் வேலைக்காக ஏற்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் “**நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறார்கள்.**” மேலும் அவர்கள் அவருடைய சொந்த “**விலையேறப்பெற்ற இரத்தத்தினால்**” வாங்கப்பட்டவர்கள். (ரோம. 8:37; 1 பேது. 1:18,19).

கொலை, இச்சை, பேராசை போன்ற பல்வேறு குணங்கள் வீழ்ச்சியின் விளைவாக ஏற்படும் சமநிலையற்ற மனம் மற்றும் சன்மார்க்க ஒழுக்க நிலைகளால் உலகம் துன்பத்துக்குள்ளாவதை காண்கிறோம். சிலர் மிகவும் மனரீதியாக சமநிலையற்றவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் மனநல மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகிறார்கள். சிலர் சன்மார்க்க ஒழுக்க ரீதியாக சமநிலையற்றவர்களாக இருப்பதால் பொதுவாக அவர்கள் வெளியிலிருக்க அனுமதிக்கப்படாமல், கண்டிப்பாக, அவசியமாக சிறைச்சாலையில் வைக்கப்பட வேண்டும். மற்றவர்கள் உலகத்தில் சுதந்திரமாக இருக்க முடிந்தாலும்,

அவர்கள் ஆரோக்கியமான மனநிலையில் இல்லை. "**அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை**" (ரோம. 3:10) என்று வேதாகமம் அறிவிக்கிறது. வேதாகமத்தின் போதனைகளை மதித்துணர நாம் கற்று கொண்டதால் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய சந்ததியின் மீது ஒரு மாபெரும் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதையும், அனைவரும் பாவத்தில் பிறந்தவர்கள் என்றும் மற்றும் "**துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்**" (சங். 51:5) என்பதையும் அறிந்து கொண்டோம். இது அநேக ஜனங்களிடம் நமக்கு மிகுந்த அனுதாபத்தைக் கொடுக்கிறது; மற்ற சிலரை விட நாம் மனரீதியாகவும், சன்மார்க்க ஒழுக்கரீதியாகவும் அதிக வலிமையான குணலட்சணத்தைப் பெற்றிருப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதுடன், "**உன்னை விசேஷித்த–வனாகும்படிச் செய்கிறவர் யார்?**" (1 கொரி. 4:7) என்று கூறுகிறோம். நாம் ஒருவேளை சிலரை விட உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களாயிருக்கலாம். மேலும் மரபு வழியாக நமக்கு கிடைக்காதது அல்ல, கிருபையின் மூலம் கிடைத்தது; எனவே நம்முடைய குணாம்சபண்பின் வலிமை நம்மிடம் இருந்து கிடைக்கப் பெற்றது இல்லை; தேவனுடைய கிருபையால் நாம் மற்றவர்களை விட சிறந்தவர்களாய் இருக்கிறோம். இது நாம் புகழ்ச்சி அடைவதற்கு அல்ல, ஆனால் மாறாக நன்றி செலுத்துவதற்குரியதாகும். கொலைகாரர்கள், திருடர்கள், சோம்பேறிகளாக அலைந்து திரிபவர்கள் அனைவரிடமும் பொதுவாக அனுதாபம் கொண்டிருக்கிறோம். மேலும் கர்த்தரும் கூட அனுதாபப்–படுகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். இது "***சிறைச்சாலையின் கதவுகளை அகல திறந்து அனைவரையும் வெளியே விடுங்கள்***" என்று சொல்லும் வகையான அனுதாபம் நம்மிடம் இருக்கிறது என்பதை அர்த்தப்–படுத்தாது. சிலர் சிறைச்சாலையில் இருந்த போது சத்தியத்தைப் பெற்றுக் கொண்டார்கள். உலகத்தில் இருப்பதை விட சிறைச்சாலையில் இருக்கும் போது குறைவான சோதனைகள் இருக்கும். சுதந்திரம் ஒரு நல்ல காரியம் தான் ஆனால் அது பொறுப்பையும் கூடுதலான சோதனைகளையும் கொண்டு வருகிறது.

## பாவமும் மரணமும் பரம்பரையானது

மனுக்குலத்தின் பலவீனத்தையும் பாவத்தையும் கருத்தில் கொள்ளும் போது "இது ஏன் இந்த முறையில் இருக்கிறது?" என்ற ஒரு கேள்வி இயல்பாகவே எழுகிறது. இந்த கேள்விக்கு பரிணாம கோட்பாடு அல்ல, வேதவாக்கியங்கள் திருப்திகரமான பதிலைத் தருகின்றன. தேவன் நம்முடைய ஆதி பெற்றோர்களை ஏதேன் தோட்டத்தில் வைக்கும் போது இந்த நிபந்தனையை அவர்களுக்கு கொடுத்திருந்தார். அதாவது என்னுடைய நீதியின் பிரமாணத்துக்கு நீங்கள் கீழ்படிந்து இருந்தால் தொடர்ந்து ஜீவனோடிருக்கலாம், ஆனால் அதன் ஆணைகளை மீறினால் நீங்கள் சாவீர்கள். நம்முடைய ஆதி பெற்றோர்கள் தெய்வீக கட்டளையைப் புறக்கணித்து கீழ்படியாமல் போனார்கள். தேவன் உடனடியாக அவர்–களுக்கு மரணத் தீர்ப்பை வழங்கினார். மரணம் கீழ்படியாமைக்குரிய தண்டனையாய் இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால், நீ பாவியாய் இருந்தால் நீ ஜீவனோடிருக்க அனுமதிக்க மாட்டேன் என்று தேவன் கூறுகிறார். என் நீதியின் பிரமாணத்திற்கு மகிழ்ச்சியாய் கீழ்ப்படிகிறவர்களுக்கு நான் நித்திய ஜீவனை கொடுக்க விரும்புகிறேன். ஏனென்றால் இயேசு சொன்னது போல்: உண்மையாய் தொழுது கொள்ளுகிறார்கள். "**பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுவார்கள். தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்–களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.**" (யோவா. 4:23). தகப்பனாகிய ஆதாம் மீது விதிக்கப்பட்ட மரண தண்ட–னைக்கு தவிர, இன்னும் கூடுதலாக அவர் மரண தண்டனையுடன் வேறு தண்டனையும் பெற்றார். அவர் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அபூரணமான முள்ளும் குருக்கும் உள்ள பூமியுடன் தொடர்புக்கு கொண்டு வரப்பட்டார். முகத்தின் வியர்வையுடன் உழைத்தார். சீர்கேடடைந்து வரும் மனுஷீகம், மனம் மற்றும் சரீரத்துடன் வரும் துயரங்களையும், துன்பங்களையும் அவர் பெற்றிருந்தார். இவை அனைத்தும் பாவத்தின் விளைவாக ஏற்பட்டதாகும். இருப்பினும் தேவனைப் பொறுத்த வரையில், பாவத்திற்கான தண்டனை மரண ஆக்கினைத் தீர்ப்பு மட்டுமே. இதன் விளைவாக "**நீ வாழத் தகுதியற்றவன், நீ நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளமாட்டாய்**" என்று தேவன் கூறினார். இருப்பினும், இயேசு தனது மனுஷீகத்தை பலிதியாகம் செய்ததின் மூலம், தேவனுடைய கிருபையால் முழு மனுக்குலத்திற்கும் – ஆதாமுக்கும் அவனது சந்ததியினர் அனைவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்–தார். அவர்கள் அனைவரும் இறுதியில் மரண தண்டனை–யிலிருந்து மீட்கப்படுவார்கள். இயேசு தமது ஆயிர வருட மேசியாவின் ஆட்சியின் போது, பாவம் மற்றும் சீர்கேட்டிலுமிருந்து; அவர்களை உயர்த்தும்படி அவர்கள் மரணத்திலிருந்து மீட்கப்படுவார்கள்.

## சுய – சீர்கேடு

எந்த அளவிற்கு நம்மை சீர்கேடடையச் செய்திருக்–கிறோம் என்று எப்போதாவது நாம் சிந்தித்ததுண்டா? நம் உயர்த்தப்படுவதற்கான நேரம் வரும்போது, நம் குணாம்சங்கள் தாழ்ந்ததாக இருப்பதற்கேற்ப முழுமையான பூரணத்தை பெறுவதில் அதிக சிரமம் இருக்கும். மரண நிலையிலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுப்பதற்கான தேவனுடைய ஏற்பாடு, ஒவ்வொருவரும் முன்னேற்றத்–திற்காக பாடுபடுவதும் ஒருவருக்கொருவர் உதவுவதும் ஆகும். ஒவ்வொருவரும் தங்கள் சீர்கேடடைந்த நிலையிலிருந்து எழுவதற்கு உழைக்க வேண்டும். அவர்கள்

எந்த ஆழத்தில் விழுந்தார்களோ அதிலிருந்து தொடங்கி நித்திய ஜீவனைப் பெற இந்த மகத்தான வேலையில் விடாமுயற்சியுடன் செய்ய வேண்டும். நமது சொந்த முயற்சியாலும், தேவனுடைய உதவியாலும் நாம் கஷ்டத்திலிருந்து மீண்டு வர வேண்டும். வேறுயாரும் "நான் இதை விட்டு வெளியேறி ஜீவனைப் பெறுவேன்" என்று வெறுமனே வார்த்தையில் சொல்பவர் எவரும் அதை விட்டு வெளியேற முடியாது. பரிபூரணத்திற்கு திரும்பும் பாதை மலையேறும் பயணமாக இருக்கும். நம் கர்த்தரும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும் நடந்த குறுகிய வழியாக எப்பக்கத்திலும் இருளும், இடுக்கமான வாசல் போன்றவையுள்ளதாக இது இருக்காது. ஆனால் அது ஒரு "பெரும்பாதையாக" ஒரு மேல்நோக்கிய வழியாக இருப்பினும் ஒரு நபரின் முன்னேற்றத்திற்கு சாதகமானதாக இருக்கும். (மத். 7:13,14; ஏசா. 35:8,9). இது அவ்வளவான ஒரு உடற்பயிற்சியல்ல ஆனால் கிறிஸ்துவைப் போன்ற குணாம்சத்தை வளர்ப்பதில் மத ஈடுபாடுடைய அறிவுத்திறனும் விடாமுயற்சியும் தேவைப்படும் ஒன்றாகும். அவன் இடத்தை மட்டும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் அவன் கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தெய்வீக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தேவையான முன்னேற்றம் அடைய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அந்த நபர் படிப்படியாக அபூரணத்திலிருந்து வெளியேறி முன்னேற்றமடைவான்.

மறுபுறம், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், அவர்களின் சோதனையின் காலத்தில் பாவத்திலிருந்து நீதிக்கு திரும்ப தேவையிருந்தது. மற்றும் அடுத்த யுகத்தில் அவர்களுக்கு உலகத்தார் பெறுவதைவிட உயர்வான ஒரு வெகுமதி கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் சுயத்துக்கும் பாவத்துக்கும் எதிரான இந்தப் போரில் வெற்றி பெற்றவர்களாக வருகிறவர்கள் உயிர்தெழுதலில் அவர்களின் வெகுமதியைப் பெறுவார்கள். ஒரே வார்த்தையில், தேவனுடைய ஜனங்கள் மரிக்கும் போது அவர்களின் ஓட்டம் முடிவடைகிறது, அவர்கள் வெளியே வரும்போது ராஜ்யத்தின் உத்தியோகத்தில் வைக்கப்படுவதற்கு தேவனுடைய சரியான நேரத்திற்காக கல்லறையில் காத்திருக்கிறார்கள். நாம் மரிக்கும் போது தேவனுடைய பிரமாணத்தின்படி ஆதாமின் மீறுதலின் முழு தீர்ப்பின் கீழ் வருகிறோம் ஏனெனில் "***நீங்கள் சாகவே சாவீர்கள்***" என்று பிரமாணம் கூறுகிறது.

## உயிர்த்தெழுதல் – உலகத்தின் நம்பிக்கை

6000 வருட பாவத்திற்கு பிறகு மனுக்குலம் ஒரு பரிதாபகரமான நிலைமையில் உள்ளது. அவர்கள் சரீரம், மனம், சன்மார்க்க, ஒழுக்கம் மற்றும் மதம் ரீதியாக வீழ்ச்சியடைந்து இருக்கின்றனர். கிறிஸ்து, தலை, சரீரம் மற்றும் தெரிந்தெடுக்கபட்ட வகுப்பார், மனுக்குலத்தின் தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கு, தகப்பனாகிய ஆதாம் வீழ்ச்சியடைவதற்கு முன்பு அனுபவித்த பரிபூரணத்தை மீண்டும் அடைய உதவுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யம் அமைக்கப்படும் போது கிறிஸ்துவும் சபையும் உலக மனுக்குலமனைத்தின் மீது – கிட்டத்தட்ட 40 பில்லியன் மனிதர்கள் – நொறுக்கப்பட்டு, வீழ்ச்சியடைந்த நிலைமையில் உள்ள ஆதாம் மற்றும் அவனுடைய சந்ததியின் மீது ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொள்வார்கள். மேலும் அப்போது இளைப்பாறுதலளிக்கும், திரும்பக் கொடுத்தலின் மகாபெரிய வேலையும் துவங்கும். சீர்ப்படுத்தும் செயல்முறை ஆயிர வருட யுக ஆட்சியில் ஓராயிரம் ஆண்டுகள் முழுவதிலும் தொடர்ந்து நடைபெறும். (வெளி. 20:4). ஜனங்கள் இப்போது ஈடுபட்டுள்ள அதிகரித்துவரும் அழிவு, எதிர்காலத்தில் அவர்கள் அதை ஜெயங்கொள்வதில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். அநேகர் பாவத்தில் தங்கள் ஈடுபாட்டை அதிகப்படுத்திக் கொண்டிருப்பார்கள், அவர்கள் கல்லறையிலிருந்து வெளியே வரும்போது அவர்கள் தங்கள் சீர்கேட்டை மேற்கொள்ள மிகவும் கடினமான நேரத்தைக் கொண்டிருப்பார்கள். இவற்றில் சில வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலர் அவமானம் மற்றும் நித்திய இகழ்ச்சிக்கும் ஆளாக நேரிடும் என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. அநேக ஜனங்கள் அவமானப்படுவதற்கு வருவார்கள், அநேக ஜனங்கள் மரித்த பின்னர் அவர்கள் குற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தது தெரியவருகிறது. எதுவாக இருந்தாலும் அது நிச்சயமாக வெளிப்படுத்தப்படும் என்று கர்த்தர் அறிவித்திருக்கிறார். உலக வரலாறு எல்லாம் தெரிய வரும்போது நாம் மிக மதிப்பிற்குரியவர்களாக எண்ணும் சிலர், அப்படியே அதற்கு நேர் எதிராயிருப்பதை நாம் காணலாம்; மேலும் இகழ்ச்சிக்குரியவர்களாக எண்ணப்பட்ட மற்றவர்கள் கண்ணியமானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் அறியப்படுவதையும் நாம் காணலாம்.

உலகத்தின் தீர்ப்பு எப்போதும் சரியானதாக இருக்காது. காலத்திற்கு முன்பே தீர்ப்பளிக்க வேண்டாம் என்று கர்த்தர் தம்முடைய ஜனங்களை எச்சரிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். கர்த்தருடைய வெளிப்படுத்துதலின் மூலம் அந்த காலம் இப்போது எபிஃபெனியில் வந்துள்ளது. அவர் காரியங்களை வெளிப்படுத்துவதற்கேற்றபடி சில தவறாத முடிவுகளை எடுப்பது சாத்தியமாகிறது. திரும்பக் கொடுத்தல் செயல்முறை துவங்கும் போது உலக மனுக்குலம் முழுவதும் அடையாளமான "பெரிய வெள்ளை சிங்காசனமான" யேகோவா தேவனுடைய நியாயத்தீர்ப்பு இருக்கையின் முன் அவர்களுடைய பரீட்சித்தலுக்காக கொண்டு வரப்படுவார்கள். பின்னர் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் திறக்கப்படும். கல்லறையிலிருந்து வெளியே வருபவர்கள் அபூரணமாய் இருப்பார்கள். ஆனால் சரியாகப் பயிற்சி செய்கிறவர்கள் அடையாளமான "பெரும்பாதையில்" ஜீவனை நோக்கிச் செல்லத்

தொடங்குவார்கள். (ஏசா. 35:8,9). அநியாயக்காரரான பரிசேயர்களைப் போல அதிக வெளிச்சத்திற்கு எதிராக பாவம் செய்தவர்கள். ரோமன் கத்தோலிக்க சபையின் கொள்கைகளை நம்பாதவர்களையும் எதிர்ப்பவர்களையும் கொடூர சித்திரவதைக்குள்ளாக்கி குற்றஞ் செய்தவர்கள் போன்றவர்களும் மேற்கொள்ளுவதற்கு மிகுதியான அவமானமும் பாவமும் பெற்றிருப்பார்கள். இவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் அவரின் கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்தால் பரிபூரண ஜீவனை நோக்கி தினமும் முன்னேறிச் செல்வார்கள். மனுக்குலத்தின் வீழ்ச்சியின் நிலைமையிலிருந்து வெளி-யேறும் போது, இந்த மோசமான கொடுந்துயரம் எல்லாம் ஒழிக்கப்பட்டு கடந்து போகும். அனைவரும் மற்றவர்களிடம் மட்டுமல்ல தங்களிலும் மாற்றத்தைக் கண்டு களிகூரு-வார்கள். 1000 வருடங்களின் துவக்கத்தில் அவமானத்திலும் இகழ்ச்சியிலும் இருந்த ஒருவன் சரியான வழியில் நடந்தால் அதன் முடிவில் நித்திய ஜீவனைப் பெறுவான். இந்தக் கோட்பாடு வேதவாக்கியங்களில் எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். தர்சீஸின் சவுல் பரிசுத்தவான்களை துன்பப்படுத்தியதினால் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் எதிரியாக இருந்தார், பரிசுத்த பேதுரு கர்த்தரை மறுதலித்தார், ஆனால் அவர் தனது தவறான போக்கை சரிசெய்து அப்போஸ்தலராகவும், உண்மையுள்ளவராகவும் இருந்தார். பூமிக்குரிய ராஜ்யத்தில் சாதகமான சூழ்நிலையின் கீழ் உலகமானது தேவனையும் அவருடைய நீதியையும் பற்றிய அறிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் போது இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் அவர்களின் எல்லா அபூரணங்-களையும் அகற்றி, "மிகவும் நல்லது" என்று ஆதியில் தேவன் சொன்னபோது ஆதாமுக்குக் கொடுத்திருந்த நல்ல பண்புகளை அவர்களுக்கு கொடுக்கும்.

## யார் ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம்

கொலைபாதகர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்று வேதவாக்கியங்கள் சொல்ல-வில்லையா? கொலைபாதகர்கள் ராஜ்யத்தில் இருக்க-மாட்டார்கள் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. அவர்கள் புறம்பே இருப்பார்கள், அவர்களுக்கு அதில் எந்த பங்கும் இல்லை - "**கொலைபாதகர் முதலியோர் புறம்பே இருப்பார்கள்**" (வெளி. 22:14,15). இந்த அறிக்கை ஒருகாலத்தில் கொலைபாதகராக இருந்த ஒரு நபர் சீர்திருத்தப்பட்டு புதுபிக்கப்பட்டு ராஜ்யத்தின் சுதந்திரவாளி-யாக மாறகூடாது என்பதை குறிப்பிடவில்லை. நாம் ஏற்கனவே வேதாகமத்தில் பரிசுத்த ஸ்தேவானின்



**ஸ்தேவானைக் கல்லெறிந்ததில் சவுல்**
**அப். 7:58—8:3**

மரணத்தைக் குறித்து குற்றவாளியாகக் குறிப்பிடபட்டுள்ள ஒரு கொலைபாதகனைப் பற்றி குறிப்பிட்டிருந்தோம், தர்ஸீசின் சவுல், அதற்கு பின்பு அவர் அப்போஸ்தலர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவரானார். பரிசுத்த ஸ்தேவான் மரணத்திற்கு கிட்டத்தட்ட அவர் பொறுப்பாளியாக இருந்தார். மேலும் சனகெரிப் சங்கத்தின் உறுப்பினராயிருந்து ஸ்தேவான் மீது கல்லெறிவதை அங்கீகரித்தார். அந்த ஒப்புதல் இல்லாமல் ஸ்தேவான் கல்லெறியப்பட்டிருக்க முடியாது. எனவே குடிகாரரும், கொலைபாதகர், அல்லது கள்ளர் யாவரும் புதிய எருசலேமான ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்று நாம் வாசிக்கும்போது இதை நாம் எப்படி புரிந்து கொள்வது? இந்த வழியில் - ராஜ்யம் நடைபெறும் காலத்தில் அனைத்து மனுக்குலமும் தேவனுடன் இணக்கமாக வருவதற்கான வாய்ப்பைப் பெறும்போது, எந்த வகையான அநீதியின் மீதும் அனுதாபத்தையோ அல்லது அன்பையோ வைத்திருப்பவர்களுக்கு தெய்வீக அங்கீகாரம் இருக்காது. அவர்கள் நகரத்தின் வாசலுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். நகரம் அடையாளமாக ராஜ்யத்தையும் தெய்வீக தயவையும் குறிக்கும்.

முதலில் எருசலேம் சபையை பிரதிநிதித்துவப்-படுத்தியது - "**ஆட்டுகுட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன். .....நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன: அவைகள் மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரெண்டு அப்போஸ்-தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன**" (வெளி. 21:9-14). எனினும் ஆயிர வருடங்களின் முடிவில்

அடையாளமான பூமிக்குரிய நகரத்தில் திரும்பக் கொடுத்தலின் செம்மறி ஆடுகள் வகுப்பார் கொண்டு வரப்படுவார்கள். (மத். 25:31-34). எனவே தேவனுடன் இசைவுக்குள்ளாக வருகிற உலக மனுக்குலத்தார் அனைவரும் அந்த நகரத்திற்குள், புதிய எருசலேமிற்குள் மற்றும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள். மேலும் அந்த நகரத்திற்கு வெளியே அனைத்து சீர்திருத்தமடையாத குணாம்சங்களுள்ள - வெள்ளாடுகள் காணப்படுகின்றன. பொய்யர்கள் மற்றும் கொலை-பாதகர்கள் போன்றவர்கள் "**அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்**" என்ற அறிக்கையின் மூலம் அவர்களைப் பற்றிய சித்திரத்தைப் பார்க்கிறோம். இந்த அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலானது, நகரத்தைப் போலவே அடையாளமானது ஆகும். இந்த நகரம் சொல்லர்த்தத்தின்படியான தங்க நகரம் அல்ல, என்பதைப் போல அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலும் சொல்லர்த்தப்படியானதல்ல. அந்த நகரம் எருசலேமி-னாலும், "நெருப்பு" கெகன்னாவினாலும் (Gehenna) சித்திரமாகக் காட்டப்படுகிறது. எருசலேம் நகரத்தின் குப்பைகள் இன்னோம் பள்ளதாக்கில் அழிவுக்காகவும், சமூகத்தின் சுத்திகரிப்புக்காகவும் போடப்பட்டது போல, ராஜ்யத்தின் பயனற்றவை அனைத்தும் அழிக்கப்பட்டு நித்தியமாய் இருக்க அனுமதிக்கப்படாது. அது மகிமையான ராஜ்யமாய், கறை, அல்லது களங்கம் அல்லது பாவத்திலிருந்தும் விடுதலையாக்கப்பட்டதாயிருக்கும். மேலும் வார்த்தையின் எந்த அர்த்தத்திலும் "**அக்கினி கடலிலே**" தள்ளப்பட்டு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்று வெளிப்படுத்துபவர் கூறுகிறார். (வேதனை அல்ல, வெளி. 21:8).

***

# கேள்வி-பதில்

"**புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்: வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள். ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது: காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்: வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள். அவைகள் பனையைப் போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும்: அவைகளுக்கு பயப்பட வேண்டாம்: அவைகள் தீமை செய்யக்கூடாது, நன்மை செய்யவும் அவைகளுக்கு சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்**" என்று எரேமியா 10:2-5 கூறுகிறது: இது கிறிஸ்துமஸ் மரங்களை வைப்பதற்கு எதிரான ஒரு எச்சரிக்கையா?

இந்த வசனங்களிலிருந்தும் சூழலிலிருந்தும் இந்த அத்தியாயம் கிறிஸ்துமஸ் மரங்களை வைப்பதைப் பற்றினதல்லாமல், அலங்கரிக்கப்பட்ட மரத்தினாலான சிக்கரங்களை உருவாக்குவதையே குறிக்கிறதாயிருக்கிறது, அவைகள் நடக்க மாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும். (வசனம் 5) (அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரங்கள் பொதுவாக சுமக்கப்படுவதில்லை). வசனம் 6-16-ல் உயிருள்ளவரும், மகாபெரியவரும், ஞானமுள்ளவரும், வல்லமை நிறைந்த சிருஷ்டிகளும் ஒரே மெய்யான தேவனுமான யேகோவாவுக்கும், மரம் மற்றும் உலோகத்தாலும், உயிரற்ற வெள்ளி மற்றும் தங்கத்தாலும் அலங்கரிக்கப்பட்டதும், புறஜாதியினரால் செய்யப்பட்டதும் வணங்கப்படுவதுமான விக்கரகங்களுக்கும் இடையிலான வேறுபாடுதான் சிந்தனைப் போக்காக இருக்கிறது. இஸ்ரயேலர்களில் சிலர் இத்தகைய விக்கரங்களை வணங்குவதில் சிக்கிக்கொண்டார்கள். எரேமியா 10:1-16 வரைக்குமானது விக்கிரகாராதனைக்கு எதிராக யேகோவா தேவன் அவருடைய ஜனங்களுக்கு கொடுக்கும் ஒரு கடுமையான எச்சரிக்கையாயிருக்கிறது.

சங். 115:1-9 மற்றும் ஆபகூ.2:9 ஆகிய வசனங்-களிலும், மாபெரும் ஜீவனுள்ள யேகோவாவுக்கும், புறஜாதிகளின் உணர்வற்ற விக்கிரகங்களுக்கும் இடையேயிருக்கிற இதே போன்றதான ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன.

நிச்சயமாகவே, தேவனுடைய ஜனங்களில் எவராவது ஒரு கிறிஸ்துமஸ் மரத்தையோ அல்லது இயற்கையிலுள்ள மற்ற பொருளையோ (பார்க்கூடியதும் தொடக்கூடியதுமான ஒன்று) அல்லது தயாரிக்கப்பட்ட பொருளையோ வணங்கி-னாலோ அல்லது யேகோவா தேவன் மற்றும் கிறிஸ்துமஸ் மரம் அல்லது வேறு எந்த இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட எந்தவிதமான பொருளுக்கும் இடையிலான வழிபாடுகளை பிரித்துபார்த்தாலோ, விக்கிரகாராதனைக்கு எதிரான வேதாகமத்தின் பல கடுமையான எச்சரிக்கைகளும் தடைகளும் அவர்களுக்குப் பொருந்தும். பிரதிஷ்டை செய்திருக்கிற பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள தேவனுடைய ஜனங்களின் ஆவியானது (2 தீமோ. 1:7) அவர்களை எந்த விதமான விக்கிரகாராதனையிலிருந்தும் பாதுகாக்கும். (1 யோவா. 5:21).

***

# தரிசனங்கள் மற்றும் சொப்பனங்கள்

(Visions and Dreams)

*BS#206, May 1953, p 39,40*

"உண்மையான கோட்பாட்டு உபதேசத்தின் வெளிச்சத்தில் The Revised Standard Version of the Bible" என்ற எங்களுடைய சிறுபுத்தகத்தை வாசித்த ஒரு பெண்மணியிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை கடந்த மாதம் நாங்கள் பெற்றுக் கொண்டோம். அவருடைய கடிதத்தின் நகலின் பகுதியை அடைப்புக் குறிக்குள் சில குறிப்புகளோடு கீழே நாங்கள் தருகிறோம்.

"எங்களுடைய போதகர் உற்சாகம் இழந்து இருக்கிற வராகவும், அவருடைய பிரசங்கங்கள், அவைகளுடைய முந்தைய வல்லமையை இழந்து இருக்கிறதாகவும் தோன்றுகிறது. பரிசுத்தாவி-யின் வல்லமையை அவர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் ஊக்கமாக ஜெபித்தேன். அதாவது, யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான் என்று இயேசு சொன்ன பிரகாரம், ஒரு நல்ல ஆவியோ அல்லது கெட்ட ஆவியோ, ஒரு நபருக்குள்ளாக எவ்வாறு புகுந்து கொள்ளக் கூடும் என்பதை என்னால் இது வரைக்கும் புரிந்துக் கொள்ள முடியவில்லை. *[ஆவி ஜீவியாகிய சாத்தான் (உதாரணமாக லூக். 22:3,4-ல்), யூதாஸின் சரீரத்திற்குள்ளாக புகுந்தான் என்று எண்ணுவது தவறானதாகும். மாறாக, யோவா. 13:2-ல் விவரிக்கிற-படி, பொல்லாத ஆலோசனைகளால் அவனுடைய ஆசைகளைத் தூண்டுவதின் மூலம், அவனுடைய இருதயத்திற்குள்ளாகப் புகுந்தான். அந்த ஆலோசனைகள் அவனுடைய இருதயத்திலே தங்கின. இது ஏறக்குறைய, நேசிக்கிற ஒருவர் தான் அன்பு செலுத்துகிறவரிடத்தில்: 'நீ எப்பொழுதும் என் இருதயத்தில் இருக்கிறாய்' (நிச்சயமாகவே, சரீரத்தில் அல்ல) என்று சொல்லு-வதற்கு ஒத்திருக்கிறது]*. நான் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கை-யில், திடீரென்று, சூறாவளியைப் போன்று ஆர்ப்பரிக்கிற காற்றின் சத்தத்தை கேட்டேன். பொருட்கள் எல்லா திசைகளிலும் பறப்பதைக் காண எதிர்பார்த்து, ஜன்னலருகே தாவினேன். ஆனால், மாறாக, ஜன்னலருகே, நான் நின்ற இடத்திலிருந்து 8 அடி தூரத்தில், ஒரு ஆவி ஜீவி கடந்து போனது. அது ஒளி ஊடுருவும் தன்மையானதாய் இருந்தது. காற்றைப் போன்று வேகமாக போனது. தெருவின் எதிரே இருக்கும் தேவாலயத்தை நோக்கி நான் பார்த்தபோது, எனக்கு ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது.

"தேவாலயத்தின் வெளிப்புறச் சுவர் மறைந்து போனதாக தெரிந்தது. மேலும், சபை பாட வகுப்பில் எங்களுடைய போதகரைப் பார்த்தேன், அந்நேரத்தில், ஒளி ஊடுருவும் தன்மையுள்ள இந்த ஜீவி, வாசல் வழியாக உள்ளே வந்தது. *[ஒரு ஆவி, வாசலைக் கண்டுபிடிக்கத் தேவையில்லை;- மாம்சத்திலே மரணத்திற்-குள்ளாக்கப்பட்டு, ஒரு ஆவி ஜீவியாக உயிர்பிக்கப்பட்ட இயேசு (1 பேது. 3:18 - விளக்கத்திற்கு 'The Time Is At Hand,' p. 108-ஐ பார்க்கவும்) கதவுகள் பூட்டியிருக்கையில், மேல்வீட்டறைக்குள்ளாக வந்து (யோவா. 20:19,26), அவர்கள் மத்தியில் ஒரு மாம்ச சரீரத்தை எடுத்தார் (அவரோடு கூட இன்னும் மற்ற இரண்டு ஆவி ஜீவிகள், மானிட ரூபத்தில் ஆபிரகாமுக்கு காட்சியளித்ததைப் போன்று - ஆதி. 18:2), அந்த தருணத்திற்காகவே உருவாக்கப்பட்ட மாம்ச சரீரத்தை பின்பு கலைத்துவிட்டார். எம்மாவுக்கு போன இரண்டு மனிதரை சந்தித்தபோது, ஒரு அந்நியராக தன்னைக் காண்பித்து, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போன போது, மாம்ச சரீரத்தை அவர் களைந்து போட்டதைப் போலவே (லூக். 24:19-31) இங்கேயும் செய்தார். ஆவி ஜீவிகளைக் காண்பதற்கு ஏற்றபடி மானிட கண்கள் உருவாக்கப்படவில்லை. எனவே, அவர்கள் மானிட கண்களுக்கு புலப்படாதவர்களாக இருக்கின்றார்கள் (யோவா. 1:18; 3:8; 4:24; 5:37)]*. எங்களுடைய போதகருக்கு நேர் பின்புறமான ஒரு இடத்தில் பார்க்க முடிகிறவண்ணமாக, எங்களுடைய போதகரின் சரீரத்தைச் சுற்றிலும் (உயிருள்ள மனித உடம்பு) ஏறத்தாழ ஒரு அங்குல அளவுக்கு முழுமையாக அவரை மூடியது. உடனேயே அவர் குதித்தெழுந்தார், தைரியம், பெலன் மற்றும் வல்லமை உள்ள தோற்றம் அவருடைய முகமெங்கும் பரவியது. பிறகு அந்த தரிசனம் மறைந்தது. பரிசுத்த ஆவி உண்மையானதும், ஒளி ஊடுருவும் தன்மையுள்ளதுமான ஆவி ஜீவி என்று பிறகு நான் அறிந்தேன்."

மற்ற தரிசனங்களையும், ஆவிகள் மானிட உடல்களை எடுத்துக்கொள்வதைப் பற்றியும் அந்தப் பெண்மணி விவரிக்கிறார். ஒருமுறை இயேசு தாமே அவளுக்கு மிக நெருக்கத்தில் தோன்றியதாகவும், ஒரு விசேஷித்த செய்தியை அவளுக்கு கொடுத்ததாகவும்கூட அவள் கூறுகிறாள். உண்மையாகவே, அவளும், ஆயிரக்கணக்கான மற்றவர்களும், தங்களின் வழிகாட்டுதலுக்காக இப்படிப்பட்ட தரிசனங்களுக்கும், தங்களுடைய சொப்பனங்களுக்கும் திரும்பியிருக்கிறார்கள்.

## கிறிஸ்தவர்களாக நாம் தரிசனங்கள் மற்றும் சொப்பனங்களை எவ்வாறு கருத வேண்டும்?

முதலாவதாக, யாக்கோபு, யோசேப்பு, தானியேல், பேதுரு, பவுல் போன்றவர்களுடைய காரியங்களில், தேவன் குறிப்பிட்ட தரிசனங்களையும், சொப்பனங்களையும் தேவ தூண்டுதலாக அளித்தார் என்பதை நாம் புரிந்துணர்ந்து கொள்ள வேண்டும். அந்தக் காலகட்டங்களில், அவர்களுக்கான ஒரு பொருத்தமான தேவையாய் அது இருந்தது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுமை பெற்ற பின், அது தேவையாக இல்லை. முன்பு செய்ததைப் போல, இப்போதும், தேவ ஆவியால் ஏவப்பட்ட தரிசனங்கள் மற்றும் சொப்பனங்களினால் அவருடைய பிள்ளைகளோடு தேவன் பேச முடியும். ஆனால், அவருடைய "இரண்டு சாட்சிகளான" (வெளி. 11:3,4) பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் ஆயத்தம் செய்யப்பட்டுவிட்டதால், அவருடைய சித்தத்தை தெரியப் படுத்தும் ஊடகமாக அவைகளை அவர் உயர்வாக மதிக்கிறார். எனவே, நம் காலத்திய எந்த தரிசனங்களும் அல்லது சொப்பனங்களும் இந்த வகையிலானவை அல்ல. இரண்டாவது வகையான தரிசனங்களும் சொப்பனங்களும்

முறையற்ற உணவுப்பழக்கம், வயிற்று கோளாறுகள், மிகுந்த பதட்டமான சூழ்நிலைகள், காய்ச்சலினால் வரும் பிதற்றல் போன்றவைகளால் வரும் மனதளவிலான கற்பனைகளைக் கொண்டவை. மூன்றாவதானவை, மானிட ஜாதியை, தவறாக வழிநடத்தவும் அடிமைப்படுத்தவும், "மதிமயக்குகிற (வஞ்சிக்கிற) ஆவிகளான" (1 தீமோ. 4:1) சாத்தானாலும் விழுந்துபோன தூதர்களாலும் (2 பேது. 2:4; யூதா 6) கொடுக்கப்படுகிற தரிசனங்களாகவும், சொப்பனங்களாகவும் இருக்கின்றன.

புதிய ஏற்பாடு முழுமையடைந்துவிட்டபடியால், மேலே குறிப்பிட்ட தரிசனமும், மற்ற எல்லா தரிசனங்கள் மற்றும் சொப்பனங்களும், கடைசியாக குறிப்பிடப்பட்ட இரண்டு வகைகளில் ஒன்றாகவோ அல்லது மற்றதாகவோதான் இருக்க வேண்டும். வேதாகமம் கற்பிக்கிறபடி (உதாரணமாக 2 தீமோ. 1:7-ல்), தேவனுடைய பரிசுத்த ஆவியானது. அவருடைய பரிசுத்த வல்லமை அல்லது மனப்பான்மை என்பதற்கு முரணாக, அது அப்படி அல்ல என்றும், வேதாகமத்தில் எந்த அத்தாட்சியும் இல்லாததும், புறமதத்து பலதெய்வ நம்பிக்கைகளில் இருந்து கடன்வாங்கப்பட்டு, இருண்ட யுகத்து பாரம்பரியங்களாக மட்டுமே இருக்கிறதும், தேவனுக்கு நிகரானதும் அவரைப் போன்ற வஸ்துவாகிய ஒரு நபர், ஒரு ஆவி என்னும் விதமாக இந்த பெண்மணிக்கும், அவள் மூலமாக மற்றவர்களுக்கும் நிரூபிக்கும் முயற்சியாக, அநேகமாக இந்த பெண்மணியின் தரிசனமும் விழுந்து போன தூதர்களால் கொடுக்கப்பட்டதாகவே இருக்கிறது. தேவனுக்கு நேராக நாம் எப்படி வழிநடத்தப்பட்டு, பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட வேண்டும் என்று நம்முடைய கர்த்தர் நமக்கு தெளிவாகக் கூறுகிறார். "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்**" (யோவா. 17:17) என்று அவர் பிதாவினிடத்தில் ஜெபித்தார். இவ்வாறாக, அவருடைய அறிவுரைகளுக்காக, ஆவிமார்க்க சப்தங்களையோ, தரிசனங்களையோ அல்லது சொப்பனங்களையோ நோக்காமல், அவருடைய வார்த்தையை கவனித்திருக்க வேண்டும். "**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு... அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்**" (2 பேது. 1:19). தேவனுடைய வார்த்தையானது, "**தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**" (2 தீமோ. 3:16,17). இப்படியிருக்க, தேவனுடைய வார்த்தையானது, நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்திற்காக நம்மை முழுமையாகத் தகுதிப்படுத்துவதற்கு அல்லது ஆயத்தமாக்குவதற்கு ஏற்றதாய் இருக்க, தேவனுடைய அறிவுரைகளுக்கும் வழிநடத்துதலுக்கும் வேறெங்காவது நாம் ஏன் நோக்க வேண்டும்?

## பரிசுத்த ஆவி எவ்வாறு நம்மை வழிநடத்துகிறது

"**மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்**" (ரோம. 8:14). தேவனுடைய பரிசுத்த ஆவி (அவருடைய பரிசுத்த வல்லமை, அவருடைய பரிசுத்த மனப்பான்மை) நம்மை எவ்வாறு வழிநடத்துகிறது? அநேகர் தேவனுடைய பரிசுத்த வார்த்தையை குறைவாக மதித்து, தேவனுடைய வார்த்தைகளைச் சார்ந்திராமல், மாறாக, சொப்பனங்கள், தரிசனங்கள், ஆவிமார்க்க சப்தங்கள் போன்றவைகள் மூலமாக, அவருடைய பரிசுத்த ஆவி தனிப்பட்ட வகையில் அவர்களைப் போதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தேவனுடைய ஆவியின் சத்தமே 'வார்த்தை' என்பதை அவர்கள் மறக்கிறார்கள். "தேவனுடைய வழிநடத்துதலை மூன்று வழிகளில், அதாவது தேவனுடைய ஆவி, அவருடைய பராமரிப்பு மற்றும் அவருடைய வார்த்தை என்று பெயரிடப்பட்ட அவைகள் மூலமாக நான் நோக்குகிறேன், இந்த வரிசை முறையில் அவைகளை நான் உயர்வாக மதிக்கிறேன்" என்று தவறாக வழி நடத்தப்பட்ட கிறிஸ்தவன் ஒருவன் ஒருமுறை கூறினான். மேலும் சிலர், தெளிவாகவே, தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் இசைவில்லாத தவறான வழிநடத்துதலை தெரிந்தெடுத்து, தேவனுடைய ஆவியின் வழி நடத்துதல் என்று கருதியவைகள் மானிட ஆவியின் வெறுமையான கற்பனைகள் என்ற வருத்தமான அத்தாட்சியைக் கொடுக்கிறார்கள். "**வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்... என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே**" (யோவா. 5:39) என்ற கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவது எவ்வளவு பாதுகாப்பானதாய் இருக்கிறது? மீண்டும், ஆவி "**என்னுடையதில் எடுத்து** (வேத வாக்கியங்களில் எழுதப்பட்டுள்ள அந்த காரியங்களை) **உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்தும்**" (யோவா. 16:14) என்று அவர் கூறுகிறார்.

இப்பொழுது தேவனுடைய வார்த்தையைத் தவிர, வேறெந்த ஊடகம் மூலமாகவும், அவருடைய பிள்ளைகளை அவருடைய ஆவி வழி நடத்துகிறது என்கிற விதமாய் வேதாகமத்தில் எந்த தகவலும் நமக்கு இல்லை. உண்மையில், "**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்: அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்** (தம்முடைய சொந்த அதிகாரத்தில் பேசாமல் - R.S.V), **தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்**

(Diaglott, A.R.V., Rotherham, Panin, Young-ஐ பார்க்கவும்) என்று இயேசு வெளிப்படையாக குறிப்பிடுகிறார். தம்முடைய சுயமாய்ப் பேசுவது அல்லது தம்முடைய சொந்த அதிகாரத்தில் பேசுவது என்பது வேத வாக்கியங்களைச் சாராமல் தனிப்பட்ட வகையில் பேசுவதாகவும் அவைகளுக்கு இரண்டாம் நிலை முக்கியத்துவத்தைக் கொடுப்பதாகவும் இருக்கும்.

நீதியின் பாதையை சுட்டிக்காட்ட, அற்புத சொப்பனங்கள், தரிசனங்கள் போன்றவைகளை எதிர்பார்ப்பதை விட, "வழி இதுவே" (ஏசா. 30:21) என்று அவர்களுக்குப் பின்னால் இருந்து சொல்லுகிற சத்தத்தை கேட்கும்படியாகவும், அதாவது தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படியாகவும், சுவிஷேச யுக சபையார் எதிர்பார்க்கப் படுகிறார்கள். இதற்கு இசைவாகவே, வேத வாக்கியமும், "**சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக: என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக**" (எரே. 23:28) என்று கூறுகிறது. நம்முடையதும் மற்றும் மற்றவர்களுடையதுமான எல்லா சொப்பனங்களையும் (அல்லது தரிசனங்களையும்) விட தேவனால் தூண்டப்பட்ட சாட்சி மிகவும் உயர்வாக வைக்கப்பட வேண்டும். நாம் நடக்கும்போது எழும் சிந்தனைகளைவிட, நாம் தூங்கும் போது எழுகிற சிந்தனைகள், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் மேற்பார்வைக்கும், சரிப்படுத்துதலுக்கும் மிக அதிக அவசியமாயிருக்கிறது. நம்முடையதும் அல்லது மற்றவர்களுடையதுமான சொப்பனங்களுக்கோ அல்லது தரிசனங்களுக்கோ அல்லாமல் தேவனுடைய வார்த்தையை மட்டுமே அவர் நமக்கு பரிந்துரைக்கிறார்.

தேவனுடைய வார்த்தைக்கு இசைவில்லாத பலமான எண்ணங்களின் பதிவு, அவருடையதல்லாத இன்னொரு ஆவியிடமிருந்து வருகிறது. தரிசனங்கள், சொப்பனங்கள், ஆவிமார்க்க சத்தங்கள் போன்றவைகள் மூலமாக, பரலோகத்திலிருந்து நேரடியான வெளிப்படுத்தல்களை பெற்றிருக்கிறதாக உரிமை கோருகிறவர்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். ஆயிரம் தரிசனங்களை அவர்கள் பெற்றிருந்தாலும் அது பொருட்டல்ல - "**வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்: இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.**" (ஏசா. 8:19,20). தேவன் தம்முடைய ஆவியின் (பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவி - 2 தீமோ. 1:7) மூலமாக, பிரதிஷ்டை செய்த தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்; "**அந்த ஆவி எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறது.**" (1 கொரி. 2:9,10). இவ்வாறாக, நம்மிடத்திலுள்ள புதிய மனம், புதிய சித்தம், தேவனுடைய பரிசுத்த மனப்பான்மை ஆகியவை கீழ்படிதலுள்ள பிள்ளைகளாக. அவருடைய சித்தத்தை அறிந்து செய்யும்படி, தேவனுடைய ஆழமான காரியங்களை ஆராயவும், தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்ளவும் நம்மைத் தூண்டுகிறது.

எந்த வழியின் மூலமாக, தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய இந்த வல்லமை வரும் என்பதை இயேசுவானவர் சுட்டிக்காட்டி "**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**" என்று கூறுகிறார். (யோவா. 6:63). அதாவது, என்னுடைய வார்த்தைகள், தேவனுடைய மனதையும், சித்தத்தையும், ஆவியையும் வெளிப்படுத்துகிறது. எனவே, நம்முடைய வெற்றிக்குத் தேவையாக இருக்கிற சத்திய வார்த்தையைக் கற்றுக் கொள்வதையே தொடர்ந்தேர்ச்சியாக நமக்கு முன்பதாக வைத்திருக்கிறோம். தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்த முற்காலத்திய பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, [சத்தியமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட] காரியங்கள் [உண்மையில்] இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததைப் போல (அப். 17:11), தேவனுடைய சித்தத்தை நாம் கற்றுக்கொண்டு அவருடைய அங்கீகாரத்தை நாம் பெற்றிருந்தால், "**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி கற்றுக்கொள்** (study)" (2 தீமோ. 2:15) என்ற புத்திமதிக்கு நாம் செவி கொடுப்போம். ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**